www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in

# சுராவின்

## மேல்நிலை – முதலாம் ஆண்டு

# வேதியியல்*

## தொகுதி I & II

**சிறப்பம்சங்கள் :**

- புதிய திருத்தப்பட்ட பாடநூல் தொகுதி - I & II இன்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.

  ஒரு மதிப்பெண் வினா விடைகள் கீழ்க்கண்ட தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.
- எல்லா கொள்குறி (object) வகை ஒரு மதிப்பெண் வினாக்களிலும் கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுக்கவும்.

  (i) சரியான விடையை தேர்ந்தெடுத்தல்

  (ii) பொருத்துக

  (iii) பூர்த்தி செய்தல்

  (iv) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுத்தல்

  (v) கூற்று, காரணம் சரியான விடையை தேர்ந்தெடுத்தல்
- அரசு மாதிரி வினாத்தாள் – 2018 *[Govt. MQP-2018]*, முதல் பருவ இடைத்தேர்வு *[First Mid-2018]*, காலாண்டுத் தேர்வு *[QY. 2018 & 19]*, அரையாண்டுத் தேர்வு *[HY. 2018 & 19]*, மார்ச் 2019 மற்றும் ஜூன் 2019 சேர்க்கப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் – 2018, சுராவின் மாதிரி வினாத்தாள், காலாண்டுப் பொதுத் தேர்வு 2019 மற்றும் அரையாண்டுத் தேர்வு 2019 வினாதாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

www.surabooks.com
orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## தொகுதி I


| அலகு எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேதியியலின் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் வேதிக் கணக்கீடுகள் | 1 - 34 |
| 2. | அணுவின் குவாண்டம் இயக்கவியல் மாதிரி | 35 - 64 |
| 3. | தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு | 65 - 85 |
| 4. | ஹைட்ரஜன் | 86 - 104 |
| 5. | கார மற்றும் காரமண் உலோகங்கள் | 105 - 126 |
| 6. | வாயு நிலைமை | 127 - 151 |
| 7. | வெப்ப இயக்கவியல் | 152 - 182 |


## தொகுதி II


| | | |
|---|---|---|
| 8. | இயற் மற்றும் வேதிச்சமநிலை | 183 - 210 |
| 9. | கரைசல்கள் | 211 - 236 |
| 10. | வேதிப் பிணைப்புகள் | 237 - 265 |
| 11. | கரிம வேதியியலின் அடிப்படைகள் | 266 - 290 |
| 12. | கரிம வேதி வினைகளின் அடிப்படைக் கருத்துக்கள் | 291 - 306 |
| 13. | ஹைட்ரோகார்பன்கள் | 307 - 328 |
| 14. | ஹேலோ ஆல்கேன்கள் மற்றும் ஹேலோ அரீன்கள் | 329 - 350 |
| 15. | சுற்றுச்சூழல் வேதியியல் | 351 - 366 |
| ★ | அரசு மாதிரி வினாத்தாள் | 367 - 369 |
| ★ | சுராவின் மாதிரி வினாத்தாள் | 370 - 372 |
| ★ | காலாண்டுப் பொதுத் தேர்வு செப்டம்பர் 2019 | 373 - 375 |
| ★ | அரையாண்டுத் தேர்வு 2019 - 20 | 376 - 378 |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net
www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# வேதியியல்

## தொகுதி I

www.surabooks.com





orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 01 வேதியியலின் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் வேதிக் கணக்கீடுகள்

www.surabooks.com

## குறிப்புச் சட்டகம்

### பகுதி - I : வேதியியலின் முக்கியத்துவம்

1. பருப்பொருட்களை வகைப்படுத்துதல்
   - ✶ இயற் வகைப்பாடு (அ) இயற்பியல் வகைப்பாடு
   - ✶ வேதி வகைப்பாடு
2. தனிமங்கள் மற்றும் சேர்மங்களின் வேதி வகைப்பாடு
   - ✶ அணு
   - ✶ தனிமம்
   - ✶ மூலக்கூறு
   - ✶ சேர்மம்
3. அணு நிறை
   - ✶ ஒப்பு அணு நிறை ($A_r$)
   - ✶ சராசரி அணு நிறை
4. மூலக்கூறு நிறை
   - ✶ ஒப்பு மூலக்கூறு நிறை
5. மோல் பற்றிய கோட்பாடு
   - ✶ அவகாட்ரோ எண்
   - ✶ மோல் வரையறை
   - ✶ மோலார் நிறை
   - ✶ மோலார் கன அளவு
6. கிராம் சமான நிறை கோட்பாடு
   - ✶ வரையறை
   - ✶ அமிலத்தின் சமான நிறை
   - ✶ காரத்தின் சமான நிறை
   - ✶ உப்பின் சமான நிறை
   - ✶ ஆக்சிஜனேற்றியின் சமான நிறை
   - ✶ ஒடுக்கியின் சமான நிறை
7. எளிய விகித வாய்ப்பாடு மற்றும் மூலக்கூறு வாய்ப்பாடு
   - ✶ தனிமங்களைக் கண்டறியும் பகுப்பாய்வு தரவுகளில் இருந்து எளிய விகித வாய்ப்பாட்டினை தீர்மானித்தல்.
   - ✶ எளிய விகித வாய்ப்பாட்டிலிருந்து மூலக்கூறு வாய்பாட்டினைக் கணக்கிடுதல்
8. வேதி வினைக் கூறுகளின் விகிதம்
   - ✶ வேதி வினைக் கூறுவிகிதம் கணக்கீடுகள்
9. வேதிவினைக் கூறுவிகிதக் கணக்கீடுகள்
   - ✶ மோல் - மோல் தொடர்பு
   - ✶ நிறை - நிறை தொடர்பு
   - ✶ நிறை - கன அளவு தொடர்பு
   - ✶ கன அளவு - கன அளவு தொடர்பு
10. வினைக்கட்டுப்பாட்டுக் காரணி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**30. சமன்செய்தல் :**

★ ஒரு வேதிவினையில் ஈடுபடும் வினைப்படுபொருட்கள் மற்றும் விளைப்பொருட்களின் அளவுகளை கணக்கிடுவதே சமன்செய்தல் ஆகும்.

**31. சமன் செய்யப்பட்ட சமன்பாடு :**

★ ஒரு சமன் செய்யப்பட்ட சமன்பாடு, ஒரு வேதி வினையினை சுருக்கிய அறிவியல் முறையில் குறிப்பிடுவதாகும்.

**32. ஆக்சிஜனேற்றம் :**

★ ஆக்சிஜனை சேர்த்தல் அல்லது ஹைட்ரஜனை நீக்குதல் ஆக்சிஜனேற்றமாகும்.

★ ஒரு வேதிவினையில் ஈடுபடும் அணு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எலக்ட்ரான்களை இழந்தால் அது ஆக்சிஜனேற்றம் ஆகும்.

★ ஒரு மூலக்கூறில், பிற எல்லா அணுக்களும் அயனிகளாக வெளியேறிய பின், அணுவின் மீதுள்ள எஞ்சிய மின்னூட்டமே, தனிமத்தின் ஆக்சிஜனேற்ற எண் ஆகும்.

★ ஒரு வேதிவினையில், ஒரு தனிமத்தின் ஆக்சிஜனேற்ற எண், அதிகரித்தால் அது ஆக்சிஜனேற்றமாகும்.

**33. ஒடுக்கம் :**

★ ஹைட்ரஜனை சேர்த்தல் அல்லது ஆக்சிஜனை நீக்குதல் ஒடுக்கம் ஆகும்.

★ ஒரு வேதிவினையில் பங்குபெறும் அணு அல்லது அணு தொகுதிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எலக்ட்ரான்களைப் பெற்றுக் கொண்டால் அதுவே ஒடுக்கம் ஆகும்.

★ ஒரு வேதிவினையில், ஒரு தனிமத்தின் ஆக்சிஜனேற்ற எண் குறைந்தால், அது ஒடுக்கம் ஆகும்.

## மதிப்பீடு

### I. சரியான விடையை தெரிவுசெய்க:

**1. 40மி.லி மீத்தேன் வாயுவானது 80மி.லி ஆக்சிஜனைக் கொண்டு முழுமையாக எரிக்கப்படுகிறது. அறை வெப்பநிலைக்கு குளிர்விக்கப்பட்ட பிறகு எஞ்சியுள்ள வாயுவின் கனஅளவு**

அ) 40 மி.லி $CO_2$ வாயு

ஆ) 40 மி.லி $CO_2$ மற்றும் 80 மி.லி $H_2O$ வாயு

இ) 60 மி.லி $CO_2$ மற்றும் 60 மி.லி $H_2O$ வாயு

ஈ) 120 மி.லி $CO_2$ வாயு

**[விடை. (அ) 40 மி.லி $CO_2$ வாயு]**

**2. தனிமம் X ன் ஐசோடோப்புகளின் இயைபு பின்வருமாறு அமைகிறது. $^{200}X = 90\%$, $^{199}X = 8\%$, $^{202}X = 2\%$ இயற்கையில் கிடைக்கும் தனிமம் X ன் தோராய அணு நிறை மதிப்பு**

அ) 201 u ஆ) 202 u

இ) 199 u ஈ) 200 u

**[விடை. (ஈ) 200 u]**

**3. கூற்று (A) : இரு மோல் குளுக்கோஸில் $12.044 \times 10^{23}$ குளுக்கோஸ் மூலக்கூறுகள் உள்ளன.**

**காரணம் (R) : ஒரு மோல் அளவுள்ள எந்த ஒரு பொருளிலும் உள்ள உட்பொருட்களின் எண்ணிக்கை $6.02 \times 10^{22}$**

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் காரணம் (R) ஆனது கூற்று (A) க்கான சரியான விளக்கம்

ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் காரணம் (R) ஆனது கூற்று (A) க்கான சரியான விளக்கமல்ல

இ) கூற்று (A) சரி மற்றும் காரணம் (R) தவறு

ஈ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

**[விடை. (ஈ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு]**

**4. கார்பன், கார்பன் மோனாக்ஸைடு கார்பன் டையாக்ஸைடு எனும் இரண்டு ஆக்ஸைடுகளை உருவாக்குகிறது. எந்த தனிமத்தின் சமான நிறை மாறாமல் உள்ளது?**

அ) கார்பன் ஆ) ஆக்சிஜன்

இ) கார்பன் மற்றும் ஆக்சிஜன்

ஈ) கார்பன், ஆக்சிஜன் இரண்டுமில்லை

**[விடை. (ஆ) ஆக்சிஜன்]**

**5. இணைதிறன் மூன்று கொண்ட உலோகத் தனிமத்தின் சமான நிறை $9g.eq^{-1}$ அதன் நீரற்ற ஆக்ஸைடின் மூலக்கூறு நிறை**

அ) 102 g ஆ) 27 g

இ) 270 g ஈ) 78 g

**[விடை. (அ) 102 g]**



www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



$$(3)\times 3 \Rightarrow \quad 3C_2O_4^{2-} \longrightarrow 6CO_2 + 6e^- \quad ......(5)$$

$$Cr_2O_7^{2-} + 14H^+ + 6e^- \longrightarrow 2Cr^{3+} + 7H^2O \quad ......(4)$$

$$\Rightarrow \; Cr_2O_7^{2-} + 3C_2O_4^{2-} + 14H^+ \longrightarrow 2Cr^{3+} + 6CO_2 + 7H^2O$$

**(iii)** அரை வினைகள் :

$$S_2O_3^{2-} \longrightarrow S_4O_6^{2-} \quad ......(1)$$

$$I_2 \longrightarrow I^- \quad ......(2)$$

$$(1) \Rightarrow \quad 2S_2O_3^{2-} \longrightarrow S_4O_6^{2-} + 2e^- \quad ......(3)$$

$$(2) \Rightarrow \quad I_2 + 2e^- \longrightarrow 2I^- \quad ......(4)$$

$$(3)+(4) \Rightarrow \quad 2S_2O_3^{2-} + I_2 \longrightarrow S_4O_6^{2-} + 2I^-$$

**(iv)** அரை வினைகள் :

$$\overset{0}{Zn} \longrightarrow Zn^{2+} \quad ......(1)$$

$$\overset{+5}{N}O_3^- \longrightarrow \overset{+2}{N}O \quad ......(2)$$

$$(1) \Rightarrow \quad Zn \longrightarrow Zn^{2+} + 2e^- \quad ......(3)$$

$$(2) \Rightarrow \quad NO_3^- + 3e^- + 4H^+ \longrightarrow NO + 2H_2O \quad ......(4)$$

$$(3)\times 3 \Rightarrow \quad 3Zn \longrightarrow Zn^{2+} + 6e^- \quad ......(5)$$

$$(4)\times 2 \Rightarrow \quad 2NO_3^- + 6e^- + 8H^+ \longrightarrow 2NO + 4H_2O \quad ......(6)$$

$$3Zn + 2NO_3^- + 8H^+ \longrightarrow 3Zn^{2+} + 2NO + 4H_2O$$

## அரசு தேர்வு வினாத்தாள்கள்

### பகுதி - I

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

**1 மதிப்பெண்**

**1.** **இணைதிறன் இரண்டு கொண்ட உலோகத் தனிமத்தின் சமான நிறை 10g eq$^{-1}$. அதன் நீரற்ற ஆக்ஸைடின் மூலக்கூறு நிறை** **[அ.மா.வி. 18]**

(அ) 46 g (ஆ) 36 g

(இ) 52 g

(ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை. (இ) 52 g]**

**2.** **0.456g உலோகமானது 0.606g அதன் உலோகக் குளோரைடினைத் தருகிறது. உலோகத்தின் சமான நிறையைக் கணக்கிடுக.** *[First Mid 2018]*

(அ) 107.92g eq$^{-1}$ (ஆ) 106.92g eq$^{-1}$

(இ) 105.92g eq$^{-1}$ (ஈ) 104.92g eq$^{-1}$

**[விடை. (அ) 107.92g eq$^{-1}$]**

**3.** **பட்டியல் I மற்றும் II ஆகியவற்றை பொருத்தி சரியான குறியீட்டை தேர்ந்தெடு.** *[QY. 2018]*

| பட்டியல் - I (மோல்களின் எண்ணிக்கை) | | பட்டியல் - II (அளவு) | |
|---|---|---|---|
| A | 0.1 மோல் | 1 | 4480 mL $CO_2$ |
| B | 0.2 மோல் | 2 | 200 mg $H_2$ வாயு |
| C | 0.25 மோல் | 3 | 9 மிலி நீர் |
| D | 0.5 மோல் | 4 | $1.51 \times 10^{23}$ ஆக்சிஜன் மூலக்கூறுகள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| (அ) | 1 | 2 | 3 | 4 |
| (ஆ) | 2 | 1 | 4 | 3 |
| (இ) | 4 | 3 | 1 | 2 |
| (ஈ) | 3 | 1 | 2 | 4 |

**[விடை. (ஆ) 2 1 4 3]**

www.surabooks.com
orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 02 அணுவின் குவாண்டம் இயக்கவியல் மாதிரி

## குறிப்புச் சட்டகம்

1. அணு மாதிரிகளைப் பற்றிய அறிமுகம்
   - ✶ தாம்சன் அணு மாதிரி
   - ✶ ரூதர்போர்டு அணு மாதிரி
   - ✶ போர் அணு மாதிரி
2. பருப்பொருட்களின் ஈரியல்புத்தன்மை
   - ✶ டி பிராக்ளி சமன்பாடு
   - ✶ கோணஉந்தத்தை குவாண்டமாக்கல்
   - ✶ டேவிசன் மற்றும் ஜெர்மரின் சோதனை
3. ஹெய்சன்பர்க்கின் நிச்சயமற்றத் தன்மை கோட்பாடு
4. அணுவின் குவாண்டம் இயக்கவியல் மாதிரி
   - ✶ ஷ்ரோடிங்கர் சமன்பாடு
   - ✶ அணுவின் குவாண்டம் இயக்கவியல் மாதிரியின் முக்கியக்கூறுகள்
5. குவாண்டம் எண்கள்
   - ✶ முதன்மை குவாண்டம் எண் (n)
   - ✶ கோண உந்தக் குவாண்டம் எண் ($l$)
   - ✶ காந்தக் குவாண்டம் எண் ($m_l$)
   - ✶ தற்சுழற்சிக் குவாண்டம் எண் ($m_s$)
6. ஆர்பிட்டால்களின் வடிவங்கள்
   - ✶ ஆரப் பங்கீட்டுச் சார்பு
   - ✶ கோணப் பகிர்வு சார்பு
   - ✶ s- ஆர்பிட்டால் வடிவம்
   - ✶ p- ஆர்பிட்டால் வடிவம்
   - ✶ d- ஆர்பிட்டால் வடிவம்
   - ✶ f- ஆர்பிட்டால் வடிவம்
7. ஆர்பிட்டால்களின் ஆற்றல்கள்
8. ஆர்பிட்டால்கள் நிரப்பப்படுதல்
   - ✶ ஆஃபாதத்துவம்
   - ✶ பௌலி தவிர்க்கை தத்துவம்
   - ✶ ஹூண்ட் விதி
9. அணுக்களின் எலக்ட்ரான் அமைப்பு
10. சரிபாதியளவு மற்றும் முழுவதும் நிரப்பப்பட்ட ஆர்பிட்டால்களின் நிலைப்புத் தன்மை
    - ✶ எலக்ட்ரான்களின் சமச்சீரான பங்கீடு
    - ✶ பரிமாற்ற ஆற்றல்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கருத்து வரைபடம்




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



கணக்கில் கொடுக்கப்பட்ட படி

$$y = x + 11.1\% \text{ of } x$$
$$= \left(x + \frac{11.1}{100}x\right) = x + 0.111x$$
$$y = 1.111x$$

நிறை எண் = 37

புரோட்டான்களின் எண்ணிக்கை + நியூட்ரான்களின் எண்ணிக்கை = 37

$$(x-1) + 1.111x = 37$$
$$x + 1.111x = 38$$
$$2.111x = 38$$
$$x = \frac{38}{2.11}$$
$$x = 18.009$$

x = 18 (முழு எண்)

∴ அணு எண் = x – 1 = 18 – 1

அணு எண் = 17

நிறை எண் = 37

∴ அயனியின் குறியீடு $_{17}Cl^{37}$.

**45. $Li^{2+}$ அயனியானது ஹைட்ரஜனை ஒத்த அயனியாகும். அதனை போர் மாதிரியின் அடிப்படையில் விவரிக்க இயலும். மூன்றாம் வட்டப்பாதையின் போர் ஆரம் மற்றும் நான்காம் வட்டப்பாதையில் உள்ள ஒரு எலக்ட்ரானின் ஆற்றல் ஆகியவற்றைக் கண்டறிக.**

**விடை.**

$$r_n = \frac{(0.529)n^2}{z} \text{Å}$$
$$E_n = \frac{-13.6(z^2)}{n^2} \text{ev atom}^{-1}$$

$Li^{2+}$ க்கு z= 3

∴ மூன்றாம் வட்டப்பாதைக்கான போர் ஆரம்,

$$r_3 = \frac{(0.529)(3)^2}{3}$$
$$= 0.529 \times 3$$
$$= 1.587 \text{ Å}$$

∴ நான்காவது வட்டப்பாதையில் உள்ள ஒரு எலக்ட்ரானின் ஆற்றல்

$$(E_4) = \frac{-13.6(3)^2}{(4)^2}$$
$$= \mathbf{-7.65 \text{ eV atom}^{-1}}.$$

**46. துகள் முடுக்கிகளைக் கொண்டு புரோட்டான்களை முடுக்குவிக்க இயலும். அத்தகைய முடுக்குவிக்கப்பட்ட $2.85 \times 10^8$ $ms^{-1}$ வேகத்தில் இயங்கும் புரோட்டான் ஒன்றின் அலை நீளத்தினை (Ål) கணக்கிடுக. (புரோட்டானின் நிறை $1.673 \times 10^{-27}$ Kg).**

**விடை.**

கொடுக்கப்பட்டுள்ளவை

$$v = 2.85 \times 10^8 \text{ ms}^{-1}$$
$$m_p = 1.673 \times 10^{-27} \text{ Kg}$$
$$\lambda = \frac{h}{mv}$$
$$= \frac{6.626 \times 10^{-34} \text{kgm}^2\text{s}^{-1}}{1.673 \times 10^{-27} \text{kg} \times 2.85 \times 10^8 \text{ms}^{-1}}$$
$$\lambda = 1.389 \times 10^{-15}$$
$$\Rightarrow \lambda = 1.389 \times 10^{-15} \text{ Å}$$

$[\because \text{Å} = 10^{-10} \text{ m}]$

**47. 140 $kmhr^{-1}$ வேகத்தில் பயணிக்கும் 160g நிறையுடைய கிரிக்கெட் பந்து ஒன்றின் டிபிராலி அலைநீளம் (cmல்) கணக்கிடுக.**

**விடை.** $m = 160 \text{ g} = 160 \times 10^{-3} \text{ kg}$

$$v = 140 \text{ km hr}^{-1} = \frac{140 \times 10^3}{60 \times 60} \text{ms}^{-1}$$
$$v = 38.88 \text{ ms}^{-1}$$
$$\lambda = \frac{h}{mv}$$
$$= \frac{6.626 \times ^{-34} \text{ Kgm}^2\text{s}^{-1}}{160 \times 10^{-3} \text{Kg} \times 38.88 \text{ms}^{-1}}$$
$$\lambda = 1.065 \times 10^{-34} \text{ m.}$$

**48. ஆர்பிட்டில் உள்ள ஒரு எலக்ட்ரானின் நிலையினைத் தீர்மானிப்பதில் உள்ள நிச்சயமற்றத் தன்மை 0.6Å என இருக்குமெனில், அதன் உந்தத்தில் ஏற்படும் நிச்சயமற்றத் தன்மை யாது?**

**விடை.**

$$\Delta x = 0.6 \text{ Å} = 0.6 \times 10^{-10} \text{ m}$$
$$\Delta p = ?$$

நிச்சயமற்ற தன்மைக்கான கணிதவியல் வாய்ப்பாடு

$$\Delta x.\Delta p \geq \frac{h}{4\pi}$$
$$\Delta x.\Delta p \geq 5.28 \times 10^{-35} \text{ kgm}^2\text{s}^{-1}$$
$$(0.6 \times 10^{-10}) \Delta p \geq 5.28 \times 10^{-35}$$
$$\Rightarrow \Delta p \geq \frac{5.28 \times 10^{-35} \text{kgm}^2\text{s}^{-1}}{0.6 10^{-10} \text{m}}$$
$$\Delta p \geq 9 \times 10^{-25} \text{ kgm s}^{-1}.$$

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**26. $Fe^{3+}$ (Z = 26), $Mn^{2+}$ (Z = 25) மற்றும் ஆர்கான் (Z = 18) ஆகியவற்றின் சிறும ஆற்றல் நிலையில் காணப்படும் தனித்த எலக்ட்ரான்களின் எண்ணிக்கையினைக் கணக்கிடுக.**

விடை. (i) $Fe^{3+}$ - ன் எலக்ட்ரான் அமைப்பு : $1s^2\ 2s^2\ 2p^6\ 3s^2\ 3p^6\ 4s^0\ 3d^5$

| 1 | 1 | 1 | 1 | 1 |
|---|---|---|---|---|

$3d^5$ — ஐந்து தனித்த எலக்ட்ரான்கள் உள்ளன.

(ii) $Mn^{2+}$ – ன் எலக்ட்ரான் அமைப்பு : $1s^2\ 2s^2\ 2p^6\ 3s^2\ 3p^6\ 4s^0\ 3d^5$

| 1 | 1 | 1 | 1 | 1 |
|---|---|---|---|---|

$3d^5$ — ஐந்து தனித்த எலக்ட்ரான்கள் உள்ளன.

(iii) Ar- ன் எலக்ட்ரான் அமைப்பு : $1s^2\ 2s^2\ 2p^6\ 3s^2\ 3p^6$

| ⥮ | ⥮ | ⥮ |
|---|---|---|

தனித்த எலக்ட்ரான் ஏதுமில்லை

## 5 மதிப்பெண் வினாக்கள்

### III. விரிவாக விடையளி :

**1. அணுவின் குவாண்டம் இயக்கவியல் மாதிரியின் முக்கியக் கூறுகள் யாவை?**

விடை. (i) அணுவில் உள்ள எலக்ட்ரான்கள் ஆற்றல் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட மதிப்பினை மட்டுமே பெற்றிருக்கும்.

(ii) வரையறுக்கப்பட்ட எலக்ட்ரான் ஆற்றல் மட்டங்கள் காணப்படுவது என்பது எலக்ட்ரான்களின் அலையினை ஒத்த பண்பின் ஒரு நேரடியான விளைவாகும். ஷ்ரோடிங்கர் அலைச் சமன்பாட்டின் தீர்வுகள், அனுமதிக்கப்பட்ட ஆற்றல் மட்டங்களைத் தருகிறது.

(iii) ஹெய்சன்பர்க்கின் நிச்சயமற்றக் கோட்பாட்டின்படி எலக்ட்ரான் ஒன்றின் துல்லியமான நிலை மற்றும் உந்தத்தினை மிகத் துல்லியமாகக் கண்டறிய இயலாது. இதன் விளைவாக ஆர்பிட்டால் கொள்கையினை குவாண்டம் இயக்கவியல் அறிமுகப்படுத்தியது.

(iv) அனுமதிக்கப்பட்ட ஆற்றல் மதிப்புகளுக்கான ஷ்ரோடிங்கள் அலைச் சமன்பாட்டின் தீர்வானது அலைச்சார்பு ψ ஐத் தருகிறது. இது அணு ஆர்பிட்டாலைக் குறிப்பிடுகிறது. அலைச் சார்பு ψ ஐப் பயன்படுத்தி எலக்ட்ரானின் அலைப் பண்பினை நன்கு விளக்க இயலும்.

(v) அலைச் சார்பு ψ க்கு என எத்தகைய இயல்பு முக்கியத்துவம் இல்லை. எனினும் (*x, y, z*) புள்ளியைச் சுற்றி அமைந்துள்ள ஒரு சிறு கனஅளவு எலக்ட்ரானை காண்பதற்கான நிகழ்தகவானது $|\psi(x, y, z)|^2\, dxdydz$ க்கு நேர்விகிதத்தில் இருக்கும்.

**2. பின்வருவனவற்றை விவரிக்க:**
**(i) முதன்மை குவாண்டம் எண்**
**(ii) கோண குவாண்டம் எண்**
**(iii) காந்த குவாண்டம் எண்**
**(iv) தற்சுழற்சி குவாண்டம் எண்**

விடை. (i) **முதன்மை குவாண்டம் எண் :**

அணுக்கருவினைச் சுற்றி எலக்ட்ரான்கள் சுழன்று வரும் ஆற்றல் மட்டத்தினை இக்குவாண்டம் எண் குறிப்பிடப்படுகிறது. இது 'n' என்ற எழுத்தால் குறிப்பிடப்படுகிறது.

✷ முதன்மைக் குவாண்டம் எண் (n) ன் மதிப்புகள் 1, 2, 3 . . . .
n = 1 என்பது K கூட்டினையும் (Shell) n = 2 என்பது L கூட்டினையும் n = 3, 4, 5 என்பன முறையே M, N, O ஆகிய கூடுகளையும் குறிப்பிடுகின்றன.

✷ ஒரு குறிப்பிட்ட கூட்டில் இடம்பெறும் அதிகபட்ச எலக்ட்ரான்களின் எண்ணிக்கையினை $2n^2$ என்ற வாய்ப்பாட்டின் மூலம் பெறலாம்.

✷ 'n' ஆனது எலக்ட்ரானின் ஆற்றல் மதிப்பினைத் தருகிறது.

$$E_n = \frac{(-1312.8)Z^2}{n^2}\ \text{kJ mol}^{-1}$$

மேலும் அணுக்கருவிலிருந்து எலக்ட்ரான் அமைந்துள்ள தூரமானது $r_n = \frac{(0.529)n^2}{Z}$ Å என்ற சமன்பாட்டால் தரப்படுகிறது.

(ii) **கோண குவாண்டம் எண் :**

✷ இது '*l*' என்ற எழுத்தால் குறிப்பிடப்படுகிறது. இது பூஜ்யம் முதல் (n – 1) வரையிலான மதிப்புகளைப் பெறுகிறது. இங்கு n என்பது முதன்மைக் குவாண்டம் எண்ணைக் குறிப்பிடுகிறது.

✷ ஒவ்வொரு *l* மதிப்பும் ஒரு துணைக்கூட்டினைக் (sub-shell or orbital) ஐக் குறிப்பிடுகிறது. *l* = 0, 1, 2, 3 மற்றும் 4 ஆகியன முறையே s, p, d, f மற்றும் g ஆர்பிட்டால்களைக் குறிப்பிடுகின்றன.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 03 தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு

## குறிப்புச் சட்டகம்

1. தனிமங்களை வகைப்படுத்துவதற்கான தேவை
   - ✶ லவாய்சியர் வகைப்பாடு
   - ✶ டாபரீனரின் மும்மை தொகுதி
   - ✶ நியூலண்ட் வகைப்பாடு
   - ✶ லோதர் மேயர் வகைப்பாடு
   - ✶ மெண்ட லீஃபின் வகைப்பாடு
   - ✶ மோஸ்லே வகைப்பாடு
2. நவீன ஆவர்த்தன அட்டவணை
3. அணு எண் 100 ஐ விட அதிகம் பெற்றுள்ள தனிமங்களுக்கு IUPAC முறையில் பெயரிடுதல்
   - ✶ பெயரிடுதலுக்கான குறியீடு
   - ✶ பெயர்கள்
4. எலக்ட்ரான் அமைப்பின் அடிப்படையில் தனிமங்களை தொகுதிபடுத்துதல்
   - ✶ வரிசைகளில் எலக்ட்ரான் அமைப்பில் ஏற்படும் மாறுபாடு
   - ✶ தொகுதிகளில் எலக்ட்ரான் அமைப்பில் ஏற்படும் மாறுபாடு
5. ஆவர்த்தன பண்புகள்
   - ✶ அணு ஆரம்
   - ✶ அயனி ஆரம்
   - ✶ அயனியாக்கும் ஆற்றல்
   - ✶ எலக்ட்ரான் நாட்டம்
   - ✶ எலக்ட்ரான் கவர் தன்மை
6. வேதிப்பண்புகளின் ஆவர்த்தனத் தொடர்பு
   - ✶ இரண்டாம் வரிசை தனிமங்களின் முரண்பட்ட பண்புகள்
   - ✶ ஆவர்த்தன தொடர்பும், வேதிவினைத் திறனும்



www.surabooks.com
orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## நினைவில் கொள்ள வேண்டிய சூத்திரங்கள்

1. மோஸ்லே தொடர்பு $\sqrt{\upsilon} = a(z-b)$

2. ஒரு படித்தான இரு அணு மூலக்கூறுகளுக்கு சகப்பிணைப்பு ஆரம்.
$r = \frac{d}{2}$

3. பல படித்தான இரு அணு மூலக்கூறுகளுக்கு சகப்பிணைப்பு ஆரம்.
$d_{A-B} = r_A + r_B - 0.09(\chi_A - \chi_B)$

4. நிகர அணுக்கரு மின்சுமை $Z_{\text{செயலுறு}} = Z - S$

5. பாலிங் அளவீடு
$E_{A-B} > \sqrt{E_{A-A} \times E_{B-B}}$

6. முலிக்கன் அளவீடு
$$\text{எலக்ட்ரான் கவர்தன்மை} = \frac{\text{அயனியாக்கும் ஆற்றல் + எலக்ட்ரான் நாட்டம்}}{2}$$

7.

| எண் வர்க்கம் | இலத்தீன் வார்த்தை |
|---|---|
| 0 | nil |
| 1 | un |
| 2 | bi |
| 3 | tri |
| 4 | quad |
| 5 | pent |
| 6 | hex |
| 7 | sept |
| 8 | oct |
| 9 | en |

8. S–தொகுதி தனிமங்களின் பொதுவான எலக்ட்ரான் அமைப்பு $ns^{1-2}$

9. P-தொகுதி தனிமங்களின் பொதுவான எலக்ட்ரான் அமைப்பு $ns^2\ np^{1-6}$

10. $d$–தொகுதி தனிமங்களின் பொதுவான எலக்ட்ரான் அமைப்பு $(n-1)\ d^{1-10}\ ns^{1-2}$

11. $f$–தொகுதி தனிமங்களின் பொதுவான எலக்ட்ரான் அமைப்பு $(n-2)f^{1-14}\ (n-1)d^{0-10}\ ns^2$

12. உலோகத் தன்மை உயரும் வரிசை $P < Si < Be < Mg < Na$

13. தனிம வரிசை அட்டவணையில் உள்ள சாதாரண தனிமங்களுக்கு அணு மற்றும் அயனி ஆரங்கள் இடமிருந்து வலம் செல்லும்போது குறைகின்றன
$$Li > Be > B > C > N > O > F$$

14. அணுவின் உருவளவுடன் அயனியாக்கும் ஆற்றல் கொண்டுள்ள தொடர்பு
$$\text{அயனியாக்கும் ஆற்றல்} \propto \frac{1}{\text{அணுவின் உருவளவு}}$$

15. உள்கூட்டு எலக்ட்ரான்களின் ஊடுருவும் திறன் குறையும் வரிசை
$$s > p > d > f$$

16. எலக்ட்ரான் கவர் என்தால்பியின் அலகு
(i) ev/ அணு
(ii) KCal/ மோல்
(iii) KJ/ மோல்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**16. எலக்ட்ரான் கவர்திறன் மாறுபாடு :**

★ எலக்ட்ரான் கவர்திறன் ஒரு வரிசையில் இடமிருந்து வலமாகச் செல்லும்போது அதிகரிக்கிறது. தொகுதியில் மேலிருந்து கீழிறங்கும்போது குறைகிறது.

## மதிப்பீடு

### I. சரியான விடையை தெரிவுசெய்க:

**1. அணு எண் 222ஐ கொண்ட தனிமத்தின் IUPAC பெயர் என்னவாக இருக்கும்?**

அ) bibibiium ஆ) bididium
இ) didibium ஈ) bibibium

**[விடை. (ஈ) bibibium]**

**2. A மற்றும் B ஆகிய தனிமங்களின் எலக்ட்ரான் அமைப்பு முறையே $1s^2$, $2s^2$, $2p^6$, $3s^2$ மற்றும் $1s^2$, $2s^2$, $2p^6$, $3s^2$, $3p^5$ ஆகும். இவ்விரு தனிமங்களுக்கிடையே தோன்றும் அயனி சேர்மத்தின் மூலக்கூறு வாய்ப்பாடு.**

அ) AB ஆ) $AB_2$
இ) $A_2B$ ஈ) எதுவும் இல்லை

**[விடை. (ஆ) $AB_2$]**

**3. வேறுபடுத்திக் காட்டும் எலக்ட்ரான், (differentiating electron) தனிமத்தின் வெளிக்கூட்டிற்கு முந்தைய ஒன்றுவிட்ட உள்கூட்டில் (anti penultimate shell) சென்று சேரும் தனிமங்களைக் கொண்டுள்ள தொகுதி.**

அ) p-தொகுதி தனிமங்கள்
ஆ) d-தொகுதி தனிமங்கள்
இ) s-தொகுதி தனிமங்கள்
ஈ) f-தொகுதி தனிமங்கள்

**[விடை. (ஈ) f-தொகுதி தனிமங்கள்]**

**4. பின்வரும் வாய்ப்புகளில், கொடுக்கப்பட்ட வரிசைகளுக்கு அவற்றிற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள பண்பினைப் பொருத்து சரியாக அமைந்திருக்காத வரிசை இடம்பெற்றுள்ள வாய்ப்பு எது? [NEET 2016 Phase I]**

அ) I < Br < Cl < F (எலக்ட்ரான் நாட்டம் அதிகரிக்கும்)
ஆ) Li < Na < K < Rb (உலோக ஆரம் அதிகரிக்கும்)
இ) $Al^{3+} < Mg^{2+} < Na^{+} < F^{-}$ (அயனி ஆரம் அதிகரிக்கும்)
ஈ) B < C < O < N (முதல் அயனியாக்கும் ஆற்றல் அதிகரிக்கும்)

**[விடை. (அ) I < Br < Cl < F (எலக்ட்ரான் நாட்டம் அதிகரிக்கும்)]**

**5. பின்வரும் தனிமங்களுள் அதிக எலக்ட்ரான் கவர்தன்மை கொண்ட தனிமம் எது?**

அ) குளோரின் ஆ) நைட்ரஜன்
இ) சீசியம் ஈ) புளூரின்

**[விடை. (ஈ) புளூரின்]**

**6. ஒரு தனிமத்தினுடைய அடுத்தடுத்த அயனியாக்கும் ஆற்றல் மதிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன ($kJ\ mol^{-1}$).**

| $IE_1$ | $IE_2$ | $IE_3$ | $IE_4$ | $IE_5$ |
|---|---|---|---|---|
| 577.5 | 1,810 | 2,750 | 11,580 | 14,820 |

**இத்தனிமமானது**

அ) பாஸ்பரஸ் ஆ) சோடியம்
இ) அலுமினியம் ஈ) சிலிகான்

**[விடை. (இ) அலுமினியம்]**

**7. மூன்றாம் வரிசையினுடைய முதல் அயனியாக்கும் ஆற்றலின் வரிசை** *[HY. 2018]*

அ) Na > Al > Mg > Si > P
ஆ) Na < Al < Mg < Si < P
இ) Mg > Na > Si > P > Al
ஈ) Na< Al < Mg < Si < P

**[விடை. (ஆ) Na < Al < Mg < Si < P]**

**8. தவறான கூற்றை கண்டறிக**

அ) ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள், குறைவான நேர்மின்சுமையைப் பெற்றுள்ள நேர்மின் அயனி, குறைவான அயனி ஆரத்தினை பெறும்.
ஆ) ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள், அதிகமான எதிர்மின்சுமையைப் பெற்றுள்ள எதிர்மின் அயனி, அதிகமான அயனி ஆரத்தினை பெறும்.
இ) தனிமவரிசை அட்டவணையில் முதல் தொகுதியில் மேலிருந்து கீழாக வரும்போது தனிமங்களின் அணு ஆரம் அதிகரிக்கின்றது.
ஈ) தனிமவரிசை அட்டவணையின் இரண்டாம் வரிசையில் இடமிருந்து வலமாக செல்லும்போது அணு ஆரம் குறைகிறது.

**[விடை. (அ) ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள், குறைவான நேர்மின்சுமையைப் பெற்றுள்ள நேர்மின் அயனி, குறைவான அயனி ஆரத்தினை பெறும்.]**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 04

# ஹைட்ரஜன்

## குறிப்புச் சட்டகம்

1. ஹைட்ரஜன் :
   - ✶ தனிம வரிசை அட்டவணையில் இடம்
   - ✶ ஹைஊட்ரஜனின் ஐசோடோப்புகள்
   - ✶ ஆர்த்தோ மற்றும் பாரா ஹைட்ரஜன்
2. ஹைட்ரஜன் தயாரித்தல் :
   - ✶ ஆய்வகத் தயாரிப்பு
   - ✶ தொழில் முறை தயாரிப்பு
   - ✶ டியூட்ரியம் தயாரித்தல்
   - ✶ டிரிட்டியம் தயாரித்தல்
3. ஹைட்ரஜனின் பண்புகள் :
   - ✶ இயற் பண்புகள்
   - ✶ வேதிப் பண்புகள்
   - ✶ டியூட்ரியத்தின் வேதிப் பண்புகள்
   - ✶ டிரிட்டியத்தின் பண்புகள்
4. ஹைட்ரஜனின் பயன்கள்
5. ஹைட்ரஜனின் சேர்மங்கள் :
   - ✶ நீர்
   - ✶ கடின நீர்
   - ✶ மென் நீர்
6. கன நீர் :
   - ✶ வேதிப் பண்புகள்
   - ✶ பயன்கள்
7. ஹைட்ரஜன் பெராக்சைடு :
   - ✶ இயற் பண்புகள்
   - ✶ வேதிப் பண்புகள்
   - ✶ பயன்கள்
   - ✶ அமைப்பு
8. ஹைட்ரைடுகள் :
   - ✶ அயனி ஹைட்ரைடுகள்
   - ✶ சகப்பிணைப்பு ஹைட்ரைடுகள்
   - ✶ உலோக ஹைட்ரைடுகள்
9. ஹைட்ரஜன் பிணைப்பு :
   - ✶ மூலக்கூறினுள் நிகழும் ஹைட்ரஜன் பிணைப்பு
   - ✶ மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பு



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**40. $NH_3$ ஆனது, 15-ம் தொகுதியில் உள்ள பிற தனிமங்களின் ஹைட்ரைடுகளை காட்டிலும் அதிக உருகுநிலை மற்றும் கொதிநிலையைக் கொண்டுள்ளது. விளக்குக.** [அ.மா.வி. 18; *QY. 2019*]

விடை. ✷ 15-ம் தொகுதியில் உள்ள பிற தனிமங்களின் ஹைட்ரைடுகளுடன் ஒப்பிட $NH_3$ ஆனது அதிக கொதிநிலை மற்றும் உருகுநிலையைப் பெற்றுள்ளது.

✷ இதற்கு காரணம் மூலக்கூறுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பு காணப்படுவதே ஆகும்.

**41. இடைச் சொருகல் ஹைட்ரைடுகள் அதில் உலோகங்களைக் காட்டிலும் குறைவான அடர்த்தியினைப் பெற்றுள்ளது ஏன்?**

விடை. ✷ உலோக ஹைட்ரைடுகள் அதில் உள்ள உலோகங்களைக் காட்டிலும் குறைவான அடர்த்தியினைப் பெற்றுள்ளன.

✷ ஏனெனில், உலோக அனிக்கோவை இடைவெளிகளில் ஹைட்ரஜன் காணப்படுவதால் உருவாகும் ஹைட்ரைடுகள் குறைவான அடர்த்தியினைப் பெற்றுள்ளது.

**42. ஹைட்ரஜனை சேமித்து வைக்க உலோக ஹைட்ரைடுகள் எவ்வகையில் பயன்படும் என நீ எதிர்பார்க்கிறாய்?**

விடை. ✷ சில உலோக ஹைட்ரைடுகளில் ஹைட்ரஜன், ஹைட்ரஜன் அணுவாக உறிஞ்சப்படுகிறது.

✷ இவ்வாறு உறிஞ்சப்பட்ட ஹைட்ரஜன் அணுவினால் அணிக்கோவை இடைவெளி விரிவடைகிறது. எனவே, நிலைப்புத்தன்மை குறைகிறது.

✷ இதனை வெப்பப்படுத்தும் போது ஹைட்ரஜன் அணுக்கள் உலோகத்தின் வழியே விரவி, புறப்பரப்பினை அடைகின்றன. மேலும் மீள இணைந்து மூலக்கூறு ஹைட்ரஜனை உருவாக்குகின்றது.

✷ நுட்பரீதியாக உலோக ஹைட்ரைடு உருவாதல் ஒரு வேதிவினையின் காரணமாக உருவாகிறது. ஆனால் இது இயற் சேமிப்பு முறை போன்று செயல்படுகிறது.

✷ அதாவது நீர் பஞ்சை போன்று இது உறிஞ்சுதல் மற்றும் வெளியிடுதலை நிகழ்த்துகிறது.

✷ இவ்வாறு உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளினால் ஹைட்ரஜனின் மீள் முறையில் ஏற்கப்படுதல் என்பது ஹைட்ரஜன் சேமிப்பு மற்றும் மீள் மின்னூட்டம் பெறச்செய்ய இயலும் உலோக ஹைட்ரைடு மின்கலன் ஆகிய பயன்பாடுகளுக்கு ஏற்றதாக உள்ளது.

**43. $NH_3$, $H_2O$ மற்றும் HF ஆகியவற்றை அவற்றின் ஹைட்ரஜன் பிணைப்புத் தன்மையின் ஏறு வரிசையில் வரிசைப்படுத்துக. தங்களது வரிசைப்படுத்தலுக்கான அடிப்படையினை விளக்குக.**

விடை. ✷ $NH_3$, $H_2O$, HF ஆகியவற்றை அவற்றின் ஹைட்ரஜன் பிணைப்புத் தன்மையின் அடிபடையில் ஏறுவரிசையில் பின்வருமாறு எழுதலாம்.

$$NH_3 < H_2O < HF$$

✷ ஹைட்ரஜன் பிணைப்பின் தன்மை ஆனது மற்ற அணுக்களின் உருவளவு மற்றும் எலக்ட்ரான் கவர்தன்மையின் அடிப்படையில் உள்ளது.

**(i)** சிறிய உருவளவையும்

**(ii)** அதிக எலக்ட்ரான் கவர் தன்மையையும் பெற்றிருந்தால் H பிணைப்பு உண்டாகும்.

✷ N, F, O – ஐ ஒப்பிட கவர் தன்மை வரிசை

$$F > O > N$$

✷ எனவே HF அதிக ஹைட்ரஜன் பிணைப்புத் தன்மையைப் பெற்றுள்ளது.

**44. $H_2O$ மற்றும். $H_2O_2$ ன் வடிவமைப்புகளை ஒப்பிடுக.**

விடை.

| $H_2O$ ன் வடிவமைப்பு | $H_2O_2$ ன் வடிவமைப்பு |
|---|---|
| இது வளைவான அமைப்பை கொண்டது | திறந்த புத்தக அமைப்பை கொண்டது |
| $H-O-H$ பிணைப்பின் கோணம் 104.5° | $H-O-H$ பிணைப்பின் கோணம் 94.8° |
| இது ஒரு முனைவுற்ற மூலக்கூறு   | இது முனைவற்ற மூலக்கூறு   |

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in

அலகு

# 05 கார மற்றும் காரமண் உலோகங்கள்

## குறிப்புச் சட்டகம்

1. s-தொகுதி தனிமங்கள்
2. கார உலோகங்கள்
   - ★ பொதுப் பண்புகள்
   - ★ லித்தியத்தின் தனித்துவமான பண்பு
   - ★ வேதிப் பண்புகள்
   - ★ பயன்கள்
3. கார உலோகச் சேர்மங்களின் பொதுப் பண்புகள்
   - ★ முக்கிய சேர்மங்கள்
4. சோடிய மற்றும் பொட்டாசியத்தின் உயிரியல் முக்கியத்துவம்
5. காரமண் உலோகங்கள்
   - ★ பொதுப்பண்புகள்
   - ★ பெரிலியத்தின் தனித்துவமிக்க பண்பு
   - ★ வேதிப் பண்புகள்
   - ★ பயன்கள்
6. காரமண் உலோகச் சேர்மங்களின் பொதுப் பண்புகள்
   - ★ கால்சியத்தின் முக்கிய சேர்மங்கள்
   - ★ கால்சியம் ஹைட்ராக்சைடு தயாரித்தல்
   - ★ ஜிப்சம்
   - ★ பாரீஸ்சாந்து
7. மெக்னீசியம் மற்றும் கால்சியத்தின் உயிரியல் முக்கியத்துவம்



orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய வரையறைகள்

1. **s-தொகுதி தனிமங்கள் :**
   ★ நவீன தனிம வரிசை அட்டவணையில். 1 மற்றும் 2 தொகுதியைச் சார்ந்த தனிமங்கள் s-தொகுதி தனிமங்கள் ஆகும்.
2. **கார உலோகங்கள் :**
   ★ கார உலோகச் சேர்மங்களைக் கொண்டுள்ள தாவர சாம்பலை குறிக்கும் al-qaily எனும் வார்த்தையில் இருந்து alkali என்ற வார்த்தை வருவிக்கப்பட்டுள்ளது.
3. **காரமண் உலோகங்கள் :**
   ★ பெரிலியத்தை தவிர்த்து, பிற தனிமங்களின் ஆக்சைடுகள் மற்றும் ஹைட்ராக்ஸைடுகள் காரத்தன்மையினைப் பெற்றுள்ளமை மற்றும் அவற்றின் ஆக்சைடுகள் புவியியல் தாதுக்களாகக் காணப்படும் தன்மை ஆகியவற்றால் இத்தனிமங்கள் பொதுவாக காரமண் உலோகங்கள் என அழைக்கப்படுகின்றன.
4. **ஜிப்சம் :**
   ★ வரலாற்றுக்கு முந்தைய பெரிய கடல் வடிநில பரப்பில் இருந்து நீர் ஆவியாவதால் ஜிப்சப் படுகைகள் உருவாகின்றன.
5. **பாரீஸ்சாந்து :**
   ★ இது கால்சியம் சல்பேட்டின் ஹெமிஹைட்ரேட் ஆகும். ஜிப்சந்தை 393K வெப்பநிலைக்கு வெப்பப்படுத்தினால் பாரீஸ்சாந்து கிடைக்கிறது.
6. **மூலைவிட்டத் தொடர்பு :**
   ★ தொகுதி –1 ல் உள்ள முதல் தனிமம் (Li) மற்றும் அதன் மூலைவிட்டத்தில் தொகுதி –2 ல் இரண்டாவதாக அமைந்துள்ள தனிமம்(Mg) ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒத்த தன்மைகள் மூலைவிட்டத் தொடர்பு என்றழைக்கப்படுகிறது.
7. **நீற்றுச் சுண்ணாம்பு :**
   ★ கால்சியம் ஹைட்ராக்சைடின் நீர்க்கரைசல் நீற்றுச் சுண்ணாம்பு பால் என அறியப்படுகிறது.
8. **சுண்ணாம்பு பால் :**
   ★ நீற்றுச் சுண்ணாம்பின் தொங்கல் நீர்க்கரைசல் சுண்ணாம்புப் பால் என அறியப்படுகிறது.
9. **பாலைவன ரோஜா :**
   ★ சில நேரங்களில் ஜிப்சம் மலர்களின் இதழ்களை ஒத்த வடிவமைப்பில் கிடைக்கப் பெறுகிறது. இது பாலைவன ரோஜா என அழைக்கப்படுகிறது.
10. **எரிக்கப்பட்ட சாந்து :**
   ★ ஜிப்சத்தை 393 K க்கு மேல் வெப்பப்படுத்தி பெறப்படும் $CaSO_4$ ஆனது எரிக்கப்பட்ட சாந்து என அறியப்படுகிறது.

www.surabooks.com

## மதிப்பீடு

### I. சரியான விடையை தெரிவுசெய்க:

1. **கார உலோகங்களுக்கு, பின்வருவனவற்றுள் எந்த வரிசைப்பண்பு தவறானது?**
   அ) நீரேற்றும் ஆற்றல் : Li > Na > K > Rb
   ஆ) அயனியாக்கும் ஆற்றல் : Li > Na > K > Rb
   இ) அடர்த்தி Li < Na < K < Rb
   ஈ) அணு உருவளவு : Li < Na < K < Rb
   **[விடை. (இ) அடர்த்தி Li < Na < K < Rb]**

2. **பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?**
   அ) கார உலோக நேரயனிகளில், $Li^+$ அயனியின் நீரேற்றும் தன்மையின் அளவு மிகக் குறைவு.
   ஆ) $KO_2$ ல் K ன் ஆக்சிஜனேற்ற எண் +1.
   இ) Na/Pb உலோக கலவையை உருவாக்க சோடியம் பயன்படுகிறது.
   ஈ) $MgSO_4$ நீரில் எளிதில் கரையும்.
   **[விடை. (அ) கார உலோக நேரயனிகளில், $Li^+$ அயனியின் நீரேற்றும் தன்மையின் அளவு மிகக் குறைவு.]**

3. **பின்வரும் சேர்மங்களில் எது கார உலோகங்களுடன் வினைப்பட்டு $H_2$ வாயுவை வெளியேற்றுவதில்லை?**
   அ) எத்தனாயிக் அமிலம்
   ஆ) எத்தனால் இ) பீனால்
   ஈ) இவற்றில் ஏதுமில்லை
   **[விடை. (ஈ) இவற்றில் ஏதுமில்லை]**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



## பகுதி - III

**விரிவாக விடையளி :** **5 மதிப்பெண்**

**1. கார மண் உலோகங்களில் BeO நீரில் கரைவது இல்லை. ஆனால் மற்ற ஆக்ஸைடுகள் நீரில் கரைகிறது. ஏன்? [மார்ச் 2019]**

விடை. BeO ஆனது நீரில் ஏறத்தாழ கரைவதில்லை. BeO ஈரியல்புத் தன்மை உடையது. $Be^{2+}$ அயனியானது சிறிய உருவளவைப் பெற்றிருப்பதால் BeO ஆனது சகப்பிணைப்புத் தன்மையைப் பெற்றுள்ளது. எனவே நீரில் கரைவதில்லை.

**2. கார உலோகங்கள் திரவ அம்மோனியாவில் கரைந்து ஏன் நீலநிற கரைசலை தருகின்றன? [ஜூன் 2019]**

விடை. கரைசல் நீல நிறமாக இருப்பதற்கான காரணம், அம்மோனியா ஏறிய எலக்ட்ரான் கட்புலனாகும் ஒளி ஆற்றலை உறிஞ்சுகிறது. ஆதலால் கரைசலுக்கு நீல நிறத்தை அளிக்கிறது. இந்த கரைசல்கள் பாரா காந்தத் தன்மை கொண்டவை, மேலும் நீண்ட நேரம் வைக்கப்பட்டால் மெதுவாக ஹைட்ரஜன் வாயுவை வெளியேற்றி அமைடை உருவாக்குகின்றன.

$$M^+ + e^- + NH_3 \longrightarrow MNH_2 + ½H_2$$

அடர் கரைசல்களில் நீல நிறமானது வெண்கல நிறத்திற்கு மாறுவதுடன், கரைசல் டையா காந்தத் தன்மை கொண்டதாக மாறுகிறது.

**3. சால்வே முறையில் சலவைசோடா எவ்வாறு தயாரிப்பாய்? [HY. 2019]**

விடை. **சால்வே முறை :** தொழிற்சாலைகளில் பயன்படும் கனிமசேர்மங்களில் சோடியம் கார்பனேட்டும் முக்கியமான ஒன்றாகும். இது சால்வே முறையில் தயாரிக்கப்படுகிறது. இந்த முறையில், அம்மோனியாவானது அம்மோனியம் கார்பனேட்டாக மாற்றப்படுகிறது, அது பின்னர் அம்மோனியாவால் தெவிட்டிய நிலையில் உள்ள சோடியம் குளோரைடு கரைசலின் வழியே அதிகளவு கார்பன் டையாக்சைடு செலுத்துவதன் மூலம் அம்மோனியம் பை கார்பனேட்டாக மாற்றப்படுகிறது. இதனால் உருவான அம்மோனியம் பை கார்பனேட் சோடியம் குளோரைடுடன் வினைப்பட்டு சோடியம் பை கார்பனேட் மற்றும் அம்மோனியம் குளோரைடைத் தருகிறது. சோடியம் பை கார்பனேட் மிகக் குறைந்த கரைதிறனைக் கொண்டுள்ளதால் வீழ்படிவாகிறது. சோடியம் பைகார்பனேட் பிரிக்கப்பட்டு, வெப்பப்படுத்தி சோடியம் கார்பனேட் பெறப்படுகிறது. இந்த வினையுடன் தொடர்புடைய வினைகள் பின்வருமாறு

$$2NH_3 + H_2O + CO_2 \rightarrow (NH_4)_2CO_3$$
$$(NH_4)_2CO_3 + H_2O + CO_2 \rightarrow 2\,NH_4HCO_3$$
$$2\,NH_3HCO_3 + NaCl \rightarrow NH_4Cl + NaHCO_3$$
$$2\,NaHCO_3 \rightarrow Na_2CO_3 + CO_2 + H_2O$$

## கூடுதல் வினாக்கள்

### 1 மதிப்பெண் வினாக்கள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. பின்வரும் சேர்மங்களை கவனி:**
**I. ஜிப்சம் II. பாரீஸ் சாந்து**
**III. கால்சியம் சல்பைடு**
**IV. எப்சம் உப்பு**
**இவற்றுள், சிலை செய்வதற்கான வார்ப்புகள் செய்ய பயன்படும் சேர்மம்**

அ) I ஆ) II இ) III ஈ) IV

**[விடை. (ஆ) II]**

**2. பின்வரும் எந்த 13-ம் தொகுதி தனிமத்தோடு பெரிலியம் ஒத்த பண்புடையது?**

அ) Si ஆ) A1 இ) P ஈ) S

**[விடை. (ஆ) A1]**

**3. கீழ்க்கண்டவற்றுள் காரமண் உலோகங்களின் இணைதிறன்**

அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 0

**[விடை. (ஆ) 2]**

**4. சோடியம் குளோரைடு பற்றிய தகவல்களில் சரியானதைத் தேர்ந்தெடு.**

அ) இது 1081k வெப்பநிலையில் உருகுகிறது.

ஆ) இது 273k வெப்பநிலையில் 100g நீரில் 36g கரைதிறனைக் கொண்டுள்ளது.

இ) வெப்பநிலையைப் பொறுத்து கரைதிறன் கனிசமாக அதிகரிப்பதில்லை.

ஈ) மேற்கண்ட அனைத்தும் சரி.

**[விடை. (ஈ) மேற்கண்ட அனைத்தும் சரி]**

**5. பின்வரும் சேர்மங்களின் வாய்ப்பாட்டை கவனி:**
**I. $MgCO_3$ II. $MgCO_3.CaCO_3$**
**III. $MgSO_4.7H_2O$ IV. $MgSO_4$**
**இவற்றுள், எப்சம் உப்பின் வாய்ப்பாடு,**

அ) I ஆ) II
இ) III ஈ) IV

**[விடை. (இ) III]**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 06 வாயு நிலைமை

## குறிப்புச் சட்டகம்

1. வாயு விதிகள்
   - ✶ பாயில் விதி
   - ✶ சார்லஸ் விதி
   - ✶ கேலூசாக் விதி
   - ✶ அவகேட்ரோ கருதுகோள்
2. நல்லியல்பு வாயுச் சமன்பாடு
3. வாயுக்கலவை
   - ✶ டால்டனின் பகுதியழுத்த விதி
   - ✶ கிரஹாமின் வாயு விரவுதல் விதி
4. நல்லியல்புத் தன்மையிலிருந்து விலகுதல்
   - ✶ அமுக்கத்திறன் காரணி (Z)
   - ✶ இயல்பு வாயுக்களுக்கான அமுக்கத்தின் காரணி
   - ✶ வாண்டர் வால்ஸ் சமன்பாடு
5. கார்பன்டை ஆக்ஸைடின், அழுத்தம், கனஅளவு, சமவெப்ப நிலைக்கோடுகள்
   - ✶ வாண்டல்வால்ஸ் மாறிகளிலிருந்து நிலைமாறு மாறிலிகளை தருவித்தல்
6. வாயுக்களைத் திரவமாக்குதல்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய வரையறைகள்

1. **அழுத்தம் :**
   ★ விசையினை விசை செலுத்தப்படும் பரப்பினால் வகுக்கக் கிடைப்பது
2. **பாஸ்கல் :**
   ★ ஒரு சதுர மீட்டருக்கு ஒரு நியூட்டன்
3. **பாயில் விதி :**
   ★ ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், குறிப்பிட்ட நிறையுள்ள வாயு அடைத்துகொள்ளும் கனஅளவானது அதன் அழுத்தத்திற்கு எதிர்விகித தொடர்புடையது.
   ★ மாறாத வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் அழுத்தமும் (P), அதன் கனஅளவு (V), எதிர் விகிதத் தொடர்பைப் பெற்றுள்ளன என்பது பாயில் விதி
4. **சார்லஸ் விதி :**
   ★ ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவிற்கு அதன் அழுத்தம் மாறாதிருக்கும்போது, கனஅளவானது அதன் வெப்பநிலையுடன் நேர்விகிதத் தொடர்புடையது.
   ★ மாறாத அழுத்தத்தில் ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் கனஅளவு(v), அதன் தனிவெப்பநிலைக்கு(T) நேர் விகிதத்தில் இருக்கும் என்பது சார்லஸ் விதி
5. **கேலூசாக் விதி :**
   ★ மாறாத கனஅளவில் குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தமானது அதன் வெப்பநிலையுடன் நேர்விகிதத் தொடர்புடையது.
   ★ ஒரு மூடப்பட்ட கொள்கலனில் உள்ள வாயுவின் அழுத்தமானது அதன் வெப்பநிலையுடன் நேர்விகிதத்தில் இருக்கும் என்பது கே–லூசாக் விதி
6. **அவகாட்ரோ கருதுகோள் :**
   ★ சமவெப்ப அழுத்த நிலையில் சமகன அளவுள்ள அனைத்து வாயுக்களும் சம எண்ணிக்கையுள்ள மூலக்கூறுகளை பெற்றிருக்கும்.
7. **டால்டனின் பகுதி அழுத்த விதி :**
   ★ ஒன்றோடொன்று வினைபுரியாத வாயுக்கலவையின் மொத்த அழுத்தமானது அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு வாயுக்களின் பகுதி அழுத்தங்களின் கூடுதலுக்குச் சமம்.
8. **கிரஹாமின் வாயு விரவுதல் விதி :**
   ★ ஒரு வாயுவின் விரவுதல் அல்லது பாய்தலின் வீதமானது, அதன் மோலார் நிறையின் வர்க்க மூலத்திற்கு எதிர்விகிதத்தில் இருக்கும்.
9. **ஜூல் தாம்சன் விளைவு :**
   ★ அழுத்தப்பட்ட வாயுவானது, ஒரு மிகச்சிறிய துளையின் வழியே குறைந்த அழுத்தப்பகுதிக்கு செலுத்தப்படும்போது குறிப்பிடத்தக்க அளவில் வாயு குளிர்ச்சி அடையும்.
10. **அளவிடக்கூடிய பண்பு :**
    ★ கனஅளவு V, அழுத்தம் P, வெப்பநிலை T மற்றும் மோல்களின் எண்ணிக்கை n ஆகியவை அளவிடக்கூடிய பண்புகளாகும்.
11. **அவகாட்ரோ விதி :**
    ★ ஒரே வடிவுடைய கலனில் அடைத்து வைக்கப்பட்ட ஒரே கொள்ளளவுள்ள (சமபருமனுள்ள) வெவ்வேறு வாயுக்கள் ஒரே வெப்பநிலையில், ஒரே அழுத்தத்தில் இருக்கும்போது அதன் அணு மூலக்கூறுகள் ஒத்த எண்ணிக்கையில் (சம அளவு எண்ணிக்கையில்) இருக்கும் என்பது அவகாட்ரோ விதி
12. **நல்லியல்பு வாயு :**
    ★ பாயில் விதிக்கும், சார்லஸ் விதிக்கும் உட்பட்டு செயல்படும் வாயுக்கள் நல்லியல்பு வாயுக்கள் எனப்படும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



**49.** **ஏரி ஒன்றில் ஒரு சிறிய குமிழி 6°C மற்றும் 4 atm உள்ள அடிப்புறத்தில் இருந்து 25°C மற்றும் 1 atm உள்ள மேற்பரப்பிற்கு வருகிறது. அதன் ஆரம்ப கனஅளவு 1.5 ml எனில் இறுதி கனஅளவினை கண்டறிக.**

**தீர்வு**

$T_1 = 8°C+273=281\ K$

$P_1 = 6.4\ atm$

$V_1 = 2.1\ mol$

$T_2 = 25°C+273=298K$

$P_1 = 1\ atm$

$V_2 = ?$

$$\frac{P_1V_1}{T_1} = \frac{P_2V_2}{T_2}$$

$$\Rightarrow V_2 = \frac{P_1V}{T_1} \times \frac{T_2}{P_2}$$

$$= \frac{6.4\ atm \times 2.1 mol \times 298\ K}{281\ K \times 1 atm}$$

$$\boxed{V_2 = 14.25 mol}$$

**50.** **ஒரு உலோகத்தினை ஹைட்ரோகுளோரிக் அமிலத்துடன் வினைபுரியச் செய்யும்போது ஹைட்ரஜன் உருவாகிறது. ஒரு மாணவன் இந்த வினையின் மூலம் 154.4 × 10$^{-3}$ ன அளவுள்ள வாயுவினை 742 mm Hg அழுத்தத்தில் மற்றும் 298 K வெப்பநிலையில் சேகரிக்கிறான் எனக் கருதவும். மாணவன் சேகரித்த ஹைட்ரஜன் வாயுவின் நிறை என்ன?**

**தீர்வு**

$V = 154.4 \times 10^{-3}\ dm^3$

$P = 742\ mm\ of\ Hg$

$T = 298\ K$

$m = ?$

$$n = \frac{PV}{RT}$$

$$= \frac{742\ mm\ Hg \times 154.4 \times 10^{-3}\ L}{62\ mm\ Hg\ L\ K^{-1}\ mol^{-1} \times 298\ K}$$

$$\boxed{n = 0.006 mol}$$

$$n = \frac{\text{நிறை}}{\text{மோலார் நிறை}}$$

நிறை $= n \times$ மோலார் நிறை

$= 0.006 \times 2.016 = 0.0121\ g$

நிறை $= 12.1\ mg$

**51.** **ஒரு வாயு 192 நொடியில் சுவரிலுள்ள ஒரு துளையின் வழியே விரவுகின்றது. $N_2$ வாயு அதே வெப்ப அழுத்த நிலையில் விரவ எடுக்கும் நேரம் 84 நொடி எனில் வாயுவின் மோலார் நிறை என்ன?** *[QY. 2019]*

**தீர்வு**

$$\frac{\gamma_{\text{வாயு}}}{\gamma_{N_2}} = \frac{t_{N_2}}{t_{\text{வாயு}}} = \sqrt{\frac{m_{N_2}}{m_{\text{வாயு}}}}$$

$$= \frac{84 sec}{192 sec} = \sqrt{\frac{14 g\,mol^{-1}}{m_{\text{வாயு}}}}$$

$$= \frac{14 g\,mol^{-1}}{m_{\text{வாயு}}}$$

$$m_{\text{வாயு}} = 14\ g\,mol^{-1} \times \left(\frac{192\ sec}{84\ sec}\right)^2$$

$$m_{\text{வாயு}} = 73.14\ g\,mol^{-1}$$

**52.** **300K ல் 52.5 g ஆக்ஸிஜன் மற்றும் 65.1 g $CO_2$ அடங்கியுள்ள தொட்டியில் கலவையின் மொத்த அழுத்தம் 9.21 atm. கலவையிலுள்ள ஒவ்வொரு வாயுவின் பகுதி அழுத்தங்களை கண்டறிக.**

**தீர்வு**

$M_{O_2} = 52.5\ g$

$P_{O_2} = ?$

$M_{CO_2} = 65.1\ g$

$P_{CO_2} = ?$

$T = 300\ K$

$P = 9.21\ atm$

$P_{O_2} = X_{O_2} \times$ மொத்த அழுத்தம்

$$X_{O_2} = \frac{n_{O_2}}{n_{O_2} + n_{CO_2}}$$

$$n_{O_2} = \frac{O_2\text{ன் நிறை}}{O_2\text{ன் மோலார் நிறை}}$$



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### 1 மதிப்பெண் வினாக்கள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. வாண்டர்வில்ஸ் சமன்பாட்டில் அழுத்தத்திற்கான திருத்தம்**

அ) $P+\frac{V^2}{a^2n}$ ஆ) $p+\frac{a^2n^2}{v^2}$

இ) $p+\frac{n^2a}{v^2}$ ஈ) $p+\frac{n^2a}{v}$

**[விடை. (இ) $p+\frac{n^2a}{v^2}$ ]**

**2. எதிர்மாறு வெப்பநிலைக்கும், வாண்டர்வால்ஸ் மாறிலிக்கும் உள்ள தொடர்பு**

அ) $T_i=\frac{Rb}{2a}$ ஆ) $T_i=\frac{2a}{Rb}$

இ) $T_i=\frac{8a}{27R^2b}$ ஈ) $T_i=\frac{8a}{27Rb}$

**[விடை. (ஆ) $T_i=\frac{2a}{Rb}$ ]**

**3. ஹீலியத்தை திரவமாக்க பெரும்பான்மையாகப் பயன்படுத்தும் முறை**

அ) லிண்டே முறை

ஆ) ஜூல் – தாம்சன் விளைவு

இ) கிளாட் முறை ஈ) கார்னாட் முறை

**[விடை. (ஆ) ஜூல் - தாம்சன் விளைவு]**

**4. கூற்று (A) : இரு வினைபுரியாத வாயுக்களை ஒன்றோடொன்று கலந்திட அனுமதிக்கும் போது, வாயு மூலக்கூறுகள் அதிக செறிவுள்ள பகுதியிலிருந்து குறைவான செறிவுள்ள பகுதிக்கு நகர்கின்றன.**

**காரணம் (R) : ஒரு வாயுவின் மூலக்கூறுகள் மற்றொரு வாயுவின் வழியே நகரும் இப்பண்பானது பாய்தல் என அழைக்கப்படுகிறது.**

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம்

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம் அல்ல

இ) (A) சரி (R) தவறு

ஈ) (A) மற்றும் (R) இரண்டும் தவறு.

**[விடை. (இ) (A) சரி (R) தவறு]**

**5. ஒரு இயல்பு வாயுவை வெப்பமாறாச் செயல்முறையில் விரிவடையச் செய்யும்போது**

அ) வெப்பமடைகிறது ஆ) குளிர்ச்சியடைகிறது

இ) வெடிக்கிறது ஈ) a & b

**[விடை. (ஆ) குளிர்ச்சியடைகிறது]**

**6. ஒரு வாயு கீழ்க்கண்ட நிலைகளில் நல்லியல்பு தன்மையிலிருந்து விலக்கம் அடைகிறது**

அ) அதிக வெப்பநிலை மற்றும் குறைந்த அழுத்தம்

ஆ) குறைந்த அழுத்தம்

இ) குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக அழுத்தம்

ஈ) அதிக வெப்பநிலை

**[விடை. (ஈ) அதிக வெப்பநிலை]**

**7. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| A) | நல்லியல்பு வாயுப் பண்பு | - | 1) குறைந்த அழுத்தம் மற்றும் அதிக வெப்பநிலை |
| B) | வெப்ப மாறா செயல்முறையில் காந்தத் தன்மையை இழத்தல் | - | 2) திரவ ஹீலியம் |
| C) | 31.1°Cல் $CO_2$ | - | 3) நிலைமாறு வெப்பநிலை |
| D) | ஜூல் தாம்சன் சோதனை | - | 4) திரவ ஆக்ஸிஜன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 2 | 3 | 1 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

**[விடை. (அ) 1 4 3 2]**

**8. வாயு A ன் மூலக்கூறுகள் வாயு Bன் மூலக்கூறுகளை விட நான்கு மடங்கு அதிக வேகத்தில் ஒரே வெப்பநிலையில் இயங்குகிறது எனில் அவற்றின் மூலக்கூறு எடைகளின் $\left[\frac{M_A}{M_B}\right]$ விகிதம்**

அ) $\frac{1}{16}$ ஆ) 4 இ) $\frac{1}{4}$ ஈ) 16

**[விடை. (ஈ) 16]**

**9. பாயில் வெப்பநிலைக்கு கீழே அழுத்தம் அதிகரிக்கப்படும் போது இயல்பு வாயுக்களுக்கான z மதிப்பு**

அ) குறைகிறது ஆ) அதிகரிக்கிறது

இ) முதலில் குறைந்து பின்னர் அதிகரிக்கிறது

ஈ) மாற்றமடைவதில்லை

**[விடை. (இ) முதலில் குறைந்து பின்னர் அதிகரிக்கிறது]**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 07 வெப்ப இயக்கவியல்

## குறிப்புச் சட்டகம்

1. அமைப்பு மற்றும் சூழல்
   - ✶ அமைப்பின் வகைகள்
   - ✶ அமைப்பின் பண்புகள்
   - ✶ வெப்ப இயக்கவியல் செயல் முறைகள்
2. வெப்ப இயக்கவியலின் பூஜ்ஜிய விதி
3. வெப்ப இயக்கவியலின் முதல் விதி
   - ✶ முதல் விதியின் கணிதவியல் கூற்று
4. என்தால்பி (H)
   - ✶ என்தால்பி மற்றும் அக ஆற்றல் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு
   - ✶ பல்வேறு வகை வினைகள் மற்றும் நிலைமை மாற்றங்களுக்கான என்தால்பி மாற்றங்கள்
5. வெப்ப வேதிச் சமன்பாடுகள்
6. கலோரி மீட்டர் முறையினை பயன்படுத்தி $\Delta U$ மற்றும் $\Delta H$ மதிப்புகளை அளவிடல்
7. ஹெஸ்ஸின் வெப்பம் மாறா கூட்டல் விதி
8. படிகக்கூடு ஆற்றல் ($\Delta H_{\text{படிகக்கூடு}}$)
9. வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதி
   - ✶ பல்வேறு கூற்றுகள்
10. கிப்ஸ் கட்டிலா ஆற்றல் (G)
    - ✶ தன்னிச்சை செயல்முறைகளுக்கான அடிப்படை விதிமுறைகள்
    - ✶ திட்ட கட்டிலா ஆற்றல் மாற்றத்திற்கும் $\Delta G^o$, சமநிலை மாறிலிக்கும் $K_{eq}$ இடையே உள்ள தொடர்பு
11. வெப்ப இயக்கவியல் மூன்றாம் விதி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**ஆ. வெப்பம் மாறா செயல்முறை:-**

✷ ஒரு செயல்முறையின்போது அமைப்பு மற்றும் சூழலுக்கு இடையே எவ்வித வெப்ப பரிமாற்றமும் நிகழாதிருப்பின் அச்செயல்முறை வெப்பம் மாறாச் செயல்முறை என வரையறுக்கப்படுகிறது.

**இ. அழுத்தம் மாறா செயல்முறை:-**

✷ ஒரு செயல்முறையில் அமைப்பானது ஆரம்ப நிலையிலிருந்து இறுதி நிலைக்கு மாற்றமடையும்போது அதன் அழுத்தம் மாறாமல் மாறிலியாக இருந்தால் அச்செயல்முறை அழுத்தம் மாறாச் செயல்முறை என வரையறுக்கப்படுகிறது.

**ஈ. கனஅளவு மாறா செயல்முறை:-**

✷ ஒரு செயல்முறையில் அமைப்பானது ஆரம்ப நிலையிலிருந்து இறுதி நிலைக்கு மாற்றமடையும்போது அதன் கனஅளவு மாறாமல் மாறிலியாக இருந்தால் அச்செயல்முறை கனஅளவு மாறா செயல்முறை என வரையறுக்கப்படுகிறது.

**30. என்ட்ரோபியின் வழக்கமான வரையறை என்ன? என்ட்ரோபியின் அலகு என்ன?**

விடை. ✷ என்ட்ரோபி என்பது ஒரு அமைப்பின் மூலக்கூறுகளின் ஒழுங்கற்ற தன்மையை அளவிடும் வெப்ப இயக்கவியல் நிலைச்சார்பு

$$ds = \frac{dq_{மீள்}}{T}$$

✷ என்ட்ரோபி என்பது பரிமாற்றப்பட்ட வெப்ப ஆற்றலை வெப்பநிலையால் வகுக்க கிடைப்பது. எனவே என்ட்ரோபியின் SI அலகு $JK^{-1}$

**31. பின்வரும் நிலைகளில் வினை நிகழ் தன்மையை நிர்ணயிக்கவும்**

(i) **$\Delta H$ மற்றும் $\Delta S$ இரண்டும் நேர்குறி மதிப்பை பெற்றிருக்கும்போது**

(ii) **$\Delta H$ மற்றும் $\Delta S$ இரண்டும் எதிர்குறி மதிப்பை பெற்றிருக்கும்போது**

(iii) **$\Delta H$ குறைகிறது. ஆனால் $\Delta S$ அதிகரிக்கிறது.**

விடை. (i) தன்னிச்சையற்றது

(ii) தன்னிச்சையற்றது

(iii) தன்னிச்சையானது

**32. கிப்ஸ் கட்டிலா ஆற்றலை வரையறு.**

விடை. ✷ கிப்ஸ் கட்டிலா ஆற்றலை பின்வருமாறு வரையறுக்கலாம்.

$$G = H - TS$$

✷ G ஒரு பொருண்மை சார் பண்பாகும். மேலும் G என்பது ஒற்றை மதிப்புடைய நிலைச்சார்பாகும்.

**33. எரிதல் என்தால்பியை வரையறு.**

விடை. ஒரு மோல் சேர்மமானது அதிக அளவு காற்று அல்லது ஆக்ஸிஜனில் முழுமையாக எரிக்கப்படும்போது ஏற்படும் என்தால்பி மாற்றல் எரிதல் என்தால்பி (அ) எரிதல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

**34. மோலார் வெப்ப ஏற்புத்திறன் வரையறு. அதன் அலகு யாது?** *[ஜூன் 2019]*

விடை. ✷ ஒரு மோல் சேர்மத்தின் வெப்பநிலையை ஒரு கெல்வின் உயர்த்த அச்சேர்மத்தால் உறிஞ்சப்படும் வெப்ப ஆற்றலின் அளவு அதன் மோலார் வெப்ப ஏற்புத்திறன் என வரையறுக்கப்படுகிறது.

✷ மோலார் வெப்ப ஏற்புத்திறனின் SI அலகு $JK^{-1}\,mol^{-1}$

**35. உணவின் கலோரி மதிப்பு வரையறு. கலோரி மதிப்பீட்டின் அலகு யாது?**

விடை. ✷ ஒரு கிராம் பொருளை முழுமையாக எரிக்கும் போது வெளிப்படும் வெப்பத்தின் அளவு அச்சேர்மத்தின் கலோரி மதிப்பு என வரையறுக்கப்படுகிறது.

✷ இதன் SI அலகு $J\,kg^{-1}$ எனினும் இது வழக்கமாக $Cal\ g^{-1}$ எனும் அலகில் குறிப்பிடப்படுகிறது.

**36. நடுநிலையாக்கல் என்தால்பியை வரையறு.**

விடை. நீர்த்த கரைசலில் ஒரு கிராம் சமான நிறை கொண்ட ஒரு அமிலமானது ஒரு கிராம் சமான நிறை கொண்ட ஒரு காரத்தால் முற்றிலும் நடுநிலையாக்கப்படும்போது ஏற்படும் என்தால்பி மாற்றம் நடுநிலையாக்கல் வெப்பம் (அல்லது) நடுநிலையாக்கல் என்தால்பி என வரையறுக்கப்படுகிறது.

**37. படிகக்கூடு ஆற்றல் என்றால் என்ன?** *[QY 2018]*

விடை. ✷ ஒரு படிகத்தில் உள்ள அயனிகளை அதன் படிக அணிக்கோவை புள்ளிகளிலிருந்து முடிவிலா தொலைவிற்கு நீக்குவதற்கு தேவைப்படும் ஆற்றலின் அளவு அப்படிகத்தின் படிகக்கூடு ஆற்றல் என வரையறுக்கப்படுகிறது.

✷ இது படிகக்கூடு என்தால்பி எனவும் அழைக்கப்படுகிறது.

**38. நிலைச்சார்புகள் மற்றும் வழிச்சார்புகள் என்றால் என்ன? இரு எடுத்துக்காட்டுகள் தருக.**

விடை. **நிலைச்சார்பு:**

✷ நிலைச்சார்பு என்பது அமைப்பின் ஒரு வெப்ப இயக்கவியல் பண்பாகும். இது அமைப்பின் கொடுக்கப்பட்ட ஒரு நிலைக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பினை கொண்டிருக்கும், மேலும் இக்குறிப்பிட்ட நிலையை அடைய பின்பற்றப்பட்ட விதியினை பொறுத்து அமைவதில்லை.

www.Surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**2. ஒரு அமைப்பினால் செய்யப்பட்ட அதிகபட்ச [நிகர வேலை] வேலைக்கான சமன்பாட்டை வருவி.**

விடை. **கிப்ஸ் கட்டிலா ஆற்றல் மற்றும் அமைப்பினால் செய்யப்பட்ட நிகர வேலை :**

$\Delta G = \Delta H - T\Delta S$

நாமறிந்தபடி,

$\Delta H = \Delta U + P\Delta V$

$\therefore \Delta H = \Delta U + P\Delta V - T\Delta S$

வெப்ப இயக்கவியல் முதல் விதிப்படி,

$\Delta U = q + w$

வெப்ப இயக்கவியல் இரண்டாம் விதிப்படி,

$\Delta S = \frac{q}{T}$

$\Delta S = q + w + P\Delta V - T\left(\frac{q}{T}\right)$

$\Delta G = w + P\Delta V$

$-\Delta G = -w - P\Delta V$

**3. உராய்வற்ற அழுத்தி பொருத்தப்பட்ட கலனில் உள்ள ஒரு வாயுவானது 1 atm வெளி அழுத்தத்திற்கு எதிராக 5 லிட்டர்கள் கன அளவிலிருந்து 10 லிட்டருக்கு விரிவடைகிறது. இவ்வாறு நிகழும்போது அது 400 J வெப்ப ஆற்றலை அதன் சூழலில் இருந்து உட்கவர்கிறது. அமைப்பின் அக ஆற்றல் மாற்றத்தை கணக்கிடுக.** *[QY. 2019]*

தீர்வு :

கொடுக்கப்பட்ட தரவுகள்,

$q = 400$ J

$V_1 = 5$ L ; $V_2 = 10$ L

$\Delta U = q - w$

$\Delta U = q - pdv$

$= 400\text{ J} - 1\text{ atm }(10 - 5)\text{ L}$

$= 400\text{ J} - 5\text{ atm L}$   [1atm L = 101.33J]

$= 400\text{ J} - 5 \times 101.33\text{J} = 400\text{ J} - 506.5\text{ J}$

$\boxed{\Delta U = -106.5\text{ J}}$

**4. வெப்ப வேதிச் சமன்பாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகளை எழுது.**

விடை. (i) சமன்படுத்தப்பட்ட வெப்ப வேதிச் சமன்பாடுகளில் உள்ள வினை குணகங்கள், வினையில் ஈடுபடும் வினைபடு மற்றும் வினைவிளை பொருட்களின் மோல்களின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுகின்றன.

(ii) ஒரு வேதிவினையின் என்தால்பி மாற்றம் $\Delta H_r$ ஆனது தகுந்த குறியீட்டு மற்றும் அலகுடன் குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) ஒரு வேதிவினையின் மறுதலை வினையை கருதும்போது, அவ்வினையின் ΔHன் எண் மதிப்பை மாற்றாமல், குறியீட்டை மட்டும் மாற்றி குறிப்பிடப்படுகிறது.

(iv) ஒரு வினையின் ΔH மதிப்பானது அவ்வினையில் ஈடுபடும் வினைப் பொருள்களின் இயற்நிலைமைகளை பொறுத்து அமைவதால், அவ்வேதி வினை ஈடுபடும் அனைத்து பொருட்களின் இயற் நிலைமைகளும் முக்கியமானவை மற்றும் அவற்றை [வாயு$_{(g)}$, நீர்மம்$_{(l)}$, நீர்மக் கரைசல்$_{(aq)}$, திண்மம்$_{(s)}$ முதலிய அடைப்புக் குறிக்குள்] வெப்ப வேதிச் சமன்பாடுகளில் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும்.

(v) ஒரு வெப்ப வேதிச் சமன்பாடு முழுவதுமாக ஒரு குறிப்பிட்ட எண்ணால் பெருக்கப்படும்போது, அதன் என்தால்பி மதிப்பும் அதே எண்ணால் பெருக்கப்படுகிறது.

(vi) ஒரு வினையின் $\Delta H_r^o$ மதிப்பு எதிர்குறியை பெற்றிருந்தால் அவ்வினை வெப்பம் உமிழ்வினை எனவும், $\Delta H_r^o$ மதிப்பு நேர்குறியை பெற்றிருந்தால் வெப்பம் கொள்வினை எனவும் அறியலாம்.

**5. $C_2H_5OH(l) + 3O_{2(g)} \rightarrow 2CO_{2(g)} + 3H_2O_{(l)}$ என்ற வினைக்கு திட்ட என்தால்பி மாற்ற மதிப்பை கணக்கிடுக. $C_2H_5OH_{(l)}$, $CO_{2(g)}$ மற்றும் $H_2O_{(l)}$ ஆகியவற்றின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகள் முறையே 277, –393.5 மற்றும் –285.5 KJmol$^{-1}$**

தீர்வு :

வரையறையின்படி $O_{2(g)}$ ன் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்பு பூஜ்ஜியமாகும்.

$\Delta H_l^o = \{(\Delta H_f^o)_{\text{வினைபடுபொருள்கள்}} - (\Delta H_f^o)_{\text{வினைபடுபொருள்கள்}}\}$

$= [2(\Delta H_f^o)_{CO_2} + 3(\Delta H_f^o)_{H_2O}] - [1(\Delta H_f^o)_{C_2H_5OH} + 3(\Delta H_f^o)_{O_2}]$

$= [2\text{mol }(-393.5)\text{KJ mol}^{-1} + 3\text{mol }(0)\text{KJ mol}^{-1}]$

$= [1\text{mol }(-277)\text{KJ mol}^{-1} + 3\text{mol}(0)\text{KJ mol}^{-1}]$

$= [-787 - 356.5] - [-277]$

$= -1643.5 + 277$

$\boxed{\Delta H_r^o = -1366.5\text{ KJ}}$

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in

# வேதியியல்

## தொகுதி II



www.surabooks.com



orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 08

# இயற் மற்றும் வேதிச்சமநிலை

## குறிப்புச் சட்டகம்

1. இயற் மற்றும் வேதிச் சமநிலை
   - ✶ இயற்சமநிலை
   - ✶ திடப்பொருள் அல்லது வாயுக்கள் திரவத்தில் கரைவதால் ஏற்படும் சமநிலை
2. வேதிச் சமநிலை
3. சமநிலையின் இயக்குத் தன்மை :
4. ஒருபடித்தான மற்றும் பலபடித்தான சமநிலைகள்
5. நிறைதாக்க விதி
   - ✶ சமநிலை மாறிலிகள்
   - ✶ $K_p$ மற்றும் $K_c$ ஆகியனவற்றிக்கு இடையேயான தொடர்பு
   - ✶ பலபடித்தான சமநிலைக்கான சமநிலை மாறிலி
6. சமநிலை மாறிலியின் பயன்பாடுகள்
   - ✶ வினை நிகழும் அளவினை கணித்தல்
   - ✶ வினையின் திசையினை நிர்ணயித்தல்
   - ✶ சமநிலையில் வினைபடு பொருள்கள் மற்றும் வினை விளைபொருள்களின் செறிவுகளை கணக்கிடுதல்
7. லீ-சாட்லியர் தத்துவம்
   - ✶ செறிவினால் ஏற்படும் விளைவு
   - ✶ அழுத்தத்தால் ஏற்படும் விளைவு
   - ✶ வெப்பநிலையின் விளைவு
   - ✶ வினைவேக மாற்றியின் விளைவு
   - ✶ மந்தவாயுவின் விளைவு
8. வாண்ட் ஹாப் சமன்பாடு

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**40. ஒரு லிட்டர் கனஅளவுடைய ஒரு மூடியகலனில், ஒரு மோல் $PCl_5$ வெப்பப்படுத்தப்படுகிறது. சமநிலையில் 0.6 மோல் குளோரின் இருந்தால் சமநிலைமாறிலியின் மதிப்பினை கணக்கிடுக.**

**விடை.** கொடுக்கப்பட்டுள்ளது

$$[PCl_5]_{ஆரம்பம்} = \frac{1 \text{ mole}}{1 \text{ dm}^3}$$

$$[Cl_2]_{சமநிலை} = 0.6 \text{ mole dm}^{-3}$$

$$PCl_5 \rightleftharpoons PCl_3 + Cl_2$$

$$[PCl_3]_{சமநிலை} = 0.6 \text{ mole dm}^{-3}$$

$$[PCl_5]_{சமநிலை} = 0.4 \text{ mole dm}^{-3}$$

$$\therefore K_C = \frac{[PCl_3][Cl_2]}{[PCl_5]} = \frac{0.6 \times 0.6}{0.4} \quad \mathbf{K_c = 0.9.}$$

**41. $SrCO_3(s) \rightleftharpoons SrO(s) + CO_2(g)$, என்ற வினையில், 1002K ல் சமநிலை மாறிலி மதிப்பு $K_P = 2.2 \times 10^{-4}$. வினைக்கான $K_C$ மதிப்பினைக் கணக்கிடுக.**

**விடை.** $SrCO_3(s) \rightleftharpoons SrO(s) + CO_2(g)$ என்ற வினைக்கு

$$\Delta n_g = 1 - 0 = 1$$

$$\therefore K_P = K_C(RT)$$

$$2.2 \times 10^{-4} = K_C (0.0821)(1002)$$

$$\Rightarrow K_C = \frac{2.2 \times 10^{-4}}{0.0821 \times 1002}$$

$$= \mathbf{2.674\ 10^{-6}}$$

**42. HI சிதைவடைதலை அறிந்து கொள்ள, ஒரு மாணவன் காற்று நீக்கப்பட்ட 3L குடுவையில் 0.3 மோல் HI வாயுவினை நிரப்புகிறான், 500°C ல் வினையினை நிகழ்த்துகிறான். சமநிலையில் HIன் செறிவு 0.05M என அவன் அறிந்துகொள்கிறான். இவ்வினைக்கு $K_P$ மற்றும் $K_C$ மதிப்புகளை கணக்கிடுக.**

**விடை.** $V = 3L$

$$[HI]_{ஆரம்பம்} = \frac{0.3 \text{ mol}}{3L} = 0.1M$$

$$[HI]_{சமநிலை} = 0.05 \text{ M}$$

$$2HI(g) \rightleftharpoons H_2(g) + I_2(g)$$

| | HI(g) | $H_2(g)$ | $I_2(g)$ |
|---|---|---|---|
| ஆரம்பசெறிவு | 0.1 | – | – |
| வினைபட்டது | 0.05 | – | – |
| சமநிலைசெறிவு | 0.05 | 0.025 | 0.025 |

$$K_C = \frac{[H_2][I_2]}{[HI]^2}$$

$$= \frac{0.025 \times 0.025}{0.05 \times 0.05}$$

$$K_C = 0.25$$

$$K_P = K_C(RT)^{\Delta ng}$$

$$\Delta n_g = 2 - 2 = 0$$

$$K_P = 0.25(RT)^0$$

$$\mathbf{K_P = 0.25}$$

**43. 2000C வெப்பநிலையில், 1atm NO மற்றும் 1atm $O_2$ ஆகிய துவக்க அழுத்த நிலைகளில் நைட்ரஜன் மோனாக்சைடின் ஆக்ஸிஜனேற்றம் ஆய்ந்தறியப்படுகிறது. சமநிலையில் ஆக்ஸிஜனின் பகுதி அழுத்தம் 0.52atm எனஅறியப்படுகிறது. $K_P$ன் மதிப்பினை கணக்கிடு**

**விடை.** $2NO(g) + O_2(g) \rightleftharpoons 2NO_2(g)$

| | NO | $O_2$ | $NO_2$ |
|---|---|---|---|
| ஆரம்ப அழுத்தம் | 1 | 1 | – |
| வினைபட்டது | 0.96 | 0.48 | – |
| சமநிலை பகுதி அழுத்தம் | 0.04 | 0.52 | 0.96 |

$$K_p = \frac{(p_{NO_2})^2}{(p_{NO})^2(p_O)} = \frac{0.96 \times 0.96}{0.04 \times 0.04 \times 0.52}$$

$$\mathbf{K_p = 1.017 \times 10^2}$$

**44. 500ml குடுவையில் 1 மோல் $CH_4$, 1 மோல் $CS_2$ 2 மோல் $H_2S$ மற்றும் 2 மோல் $H_2$ கலக்கப்படுகிறது. இவ்வினையின் சமநிலை மாறிலி $K_C = 4 \times 10^{-2}$ mol$^2$ lit$^{-2}$. இவ்வினையானது சமநிலையை அடைய எந்த திசையில் நகரும்?**

**விடை.** $CH_4(g) + 2H_2S(g) \rightleftharpoons CS_2(g) + 4H_2(g)$

$$K_C = 4 \times 10^{-2} \text{ mol lit}^{-2}$$

கன அளவு $= 500 \text{ ml} = \frac{1}{2}$ L

$$[CH_4] = \frac{1 \text{ mol}}{\frac{1}{2}L} = 2 \text{ mol L}^{-1} \qquad [CS_2] = \frac{1 \text{ mol}}{\frac{1}{2}L} = 2 \text{ mol L}^{-1}$$

$$[H_2S] = \frac{2 \text{ mol}}{\frac{1}{2}L} = 4 \text{ mol L}^{-1} \qquad [H_2] = \frac{2 \text{ mol}}{\frac{1}{2}L} = 4 \text{ mol L}^{-1}$$

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

## 1 மதிப்பெண் வினாக்கள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. வினை நிகழும் அளவினை ________ கொண்டு அறிய முடியும்.**

(அ) வேதிவினை வேகவியல்
(ஆ) வெப்ப இயக்கவியல்
(இ) சமநிலை மாறிலி
(ஈ) இவற்றில் எதுமில்லை.

**[விடை. (இ) சமநிலை மாறிலி]**

**2. ஒரு பொருளின் திட மற்றும் திரவ நிலைமைகளுக்கிடையே எவ்வெப்பநிலையில் சமநிலை காணப்படுகிறதோ, அவ்வெப்பநிலை அப்பொருளின் ________ எனப்படும்.**

**(i) உறைநிலை (ii) உருகுநிலை**
**(ii) ஆவி சமநிலை**

(அ) (i) மட்டும் (ஆ) (ii) மட்டும்
(இ) (i) (ii) (ஈ) (iii) மட்டும்.

**[விடை. (இ) (i) (ii)]**

**3. சேர்க்கப்படும் திடப்பொருள் கரையாமல் திட நிலையிலேயே இருக்கும் கரைசல்**

(அ) தெவிட்டிய கரைசல் (ஆ) தெவிட்டாத கரைசல்
(இ) உண்மை கரைசல் (ஈ) தொங்கல் கரைசல்

**[விடை. (அ) தெவிட்டிய கரைசல்]**

**4. எந்த வெப்பநிலையில் திரவ மற்றும் ஆவி நிலைமைகள் சமநிலையில் உள்ளதோ அவ்வெப்பநிலை அத்திரவத்தின் ________ என அழைக்கப்படுகிறது.**

**(i) சுருங்குதல் புள்ளி**
**(ii) கொதிநிலைப் புள்ளி**
**(ii) திரவச் சமநிலை**

(அ) (i) மட்டும் (ஆ) (ii) மட்டும்
(இ) (i) (ii) (ஈ) (iii) மட்டும்.

**[விடை. (இ) (i) (ii)]**

**5. பின்வரும் சமன்பாட்டை கவனி :**

$I_2(s) \rightleftharpoons I_2(g)$

**இச்சமன்பாடு குறிப்பது**

(அ) உருகுநிலை (ஆ) உறைநிலை
(இ) ஆவியாதல் (ஈ) பதங்கமாதல்

**[விடை. (ஈ) பதங்கமாதல்]**

**6. வாயு கரைசல் சமநிலையினை விளக்குவதற்கு பயன்படும் விதி**

(அ) வான்ட் ஹாப் விதி (ஆ) லீ-சாட்லியர் விதி
(இ) ஹென்றி விதி (ஈ) ஜுல் தாம்சன் விதி

**[விடை. (இ) ஹென்றி விதி]**

**7.** $N_2(g) + O_{2(g)} \rightleftharpoons 2NO_{(g)}$ **என்ற வினையின்** $\Delta n_g$ **மதிப்பு**

(அ) 0 (ஆ) 1 (இ) 2 (ஈ) 3

**[விடை. (அ) 0]**

**8. பின்வரும் சமன்பாட்டை கவனி :**

(i) $H_2(g) + I_2(g) \rightleftharpoons 2HI(g)$
(ii) $CH_3\,COOCH_{3(aq)} + H_2O_{(aq)} \rightleftharpoons CH_3OH_{(aq)}$
(ii) $CaCO_3(s) \rightleftharpoons CaO(s) + CO_2(g)$

**இவற்றுள் மாறுபட்டது எது?**

(அ) (i) மட்டும் (ஆ) (ii) மட்டும்
(இ) (iii) மட்டும் (ஈ) (i) (ii) மட்டும்.

**[விடை. (இ) (iii) மட்டும்]**

**9. நம் உடலில் உள்ள ஹீமோகுளோபினால் ஆக்ஸிஜன் எடுத்துச் செல்லும் செயல்முறை எதற்கு உதாரணம்?**

விடை. மீளும் செயல்முறை

**10. மீள வினைகள் ஆரம்பத்தில் எந்த திசையில் நகர்கின்றன?**

விடை. வினை விளைப் பொருள் உருவாகும் திசையில்

**11. வினை வேகம் என்பது**

(அ) வினைபடு பொருள்களின் மோலார் செறிவுகளின் பெருக்கற்பலனுக்கு நேர் விகிதத்தில் இருக்கும்.
(ஆ) வினை விளை பொருள்களின் மோலார் செறிவுகளின் பெருக்கற்பலனுக்கு நேர் விகிதத்தில் இருக்கும்.
(இ) வினைபடு பொருள்களின் மோலார் செறிவுகளின் பெருக்கற்பலனுக்கு எதிர் விகிதத்தில் இருக்கும்.
(ஈ) வினை விளை பொருள்களின் மோலார் செறிவுகளின் பெருக்கற்பலனுக்கு எதிர் விகிதத்தில் இருக்கும்.

**[விடை. (அ) வினைபடு பொருள்களின் மோலார் செறிவுகளின் பெருக்கற்பலனுக்கு நேர் விகிதத்தில் இருக்கும்.]**

www.Surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 09 கரைசல்கள்

## குறிப்புச் சட்டகம்

1. கரைசல்களின் வகைகள்
2. கரைசல்களின் செறிவுகளைக் குறிப்பிடுதல்
   * திட்டக் கரைசல்கள் மற்றும் பயன்பாட்டு திட்டக் கரைசல்கள்
   * திட்டக் கரைசல்களை பயன்படுத்துவதன் நன்மைகள்
3. கரைபொருளின் கரைதிறன்
   * கரைதிறனைப் பாதிக்கும் காரணிகள்
4. ஹென்றி விதி
   * ஹென்றி விதியின் வரம்புகள்
5. திரவத்தின் ஆவி அழுத்தம்
6. திரவக் கரைசல்களின் ஆவி அழுத்தம்
   * திரவத்தில் திரவத்தைக் கொண்ட இருகூறுக்கரைசலின் ஆவி அழுத்தம்
7. நல்லியல்பு மற்றும் இயல்புக் கரைசல்கள்
   * நல்லியல்புக் கரைசல்கள்
   * இயல்புக் கரைசல்கள்
   * ரௌல்ட் விதியிலிருந்து விலகலடைவதற்கு காரணமான காரணிகள்
8. தொகைசார் பண்புகள்
   * ஒப்பு ஆவி அழுத்தக்குறைவு
   * ஒப்பு ஆவி அழுத்தக்குறைவிலிருந்து மோலார் நிறைகளைக் கணக்கிடுதல்
   * கொதிநிலை ஏற்றம்
   * உறை நிலைத் தாழ்வு
   * சவ்வூடு பரவல் மற்றும் சவ்வூடுபரவல் அழுத்தம்
   * சவ்வூடு பரவல் அழுத்தத்திலிருந்து மோலார் நிறையைக் கணக்கிடல்.
   * ஐசோடானிக் கரைசல்கள்
   * எதிர் சவ்வீடு-பரவல்
   * அசாதாரண மோலார் நிறை
   * வாண்ட்-ஹாஃப் காரணி

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**38. A என்ற திடப்பொருள் மற்றும் அதன் மூன்று கரைசல்கள் (i) ஒரு தெவிட்டிய கரைசல், (ii) ஒரு தெவிட்டா கரைசல் மற்றும் (iii) ஒரு மீ தெவிட்டிய கரைசல் ஆகியன உன்னிடம் வழங்கப்பட்டுள்ளது. எந்த கரைசல் என்ன வகையானது என எவ்வாறு கண்டறிவாய்?**

விடை. ✷ ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் எந்த ஒரு கரைசலில் ஒரு குறிப்பிட்ட அளவு கரைப்பானில் மேலும் கரைபொருள் கரைய முடியாதோ, அக்கரைசல் தெவிட்டிய கரைசல்.

✷ ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் மேலும் கரைபொருளைக் கரைக்க முடிந்த கரைசல் தெவிட்டாத கரைசல், இக்கரைசல் தெவிட்டும் நிலை அடையும் வரை இதனுடன் கரைபொருளைச் சேர்க்க முடியும்.

✷ குறிப்பிட்ட வெப்பநிலையில் தெவிட்டிய கரைசலைவிட அதிகமான கரைபொருளைக் கொண்ட கரைசல் மீ தெவிட்டிய கரைசல்.

**39. கரைதிறன் மீதான அழுத்தத்தின் விளைவை விளக்குக.**

விடை. ✷ பொதுவாக, அழுத்தத்தில் ஏற்படும் மாற்றமானது திண்மங்கள் மற்றும் நீர்மங்களின் கரைதிறனில் குறிப்பிடத்தகுந்த விளைவை உருவாக்குவதில்லை.

✷ ஏனெனில் அவை அமுங்குவதில்லை. எனினும், வாயுக்களின் கரைதிறனானது, பொதுவாக அழுத்தம் அதிகரிக்கும்போது அதிகரிக்கிறது.

**40. 12 M செறிவுடைய ஹைட்ரோகுளோரிக் அமில கரைசல் ஒன்றின் அடர்த்தி 1.2 g $L^{-1}$. அதன் செறிவை மோலாலிட்டியை கணக்கிடுக.**

விடை. கொடுக்கப்பட்டவை,

மோலாரிட்டி = 12 m HCl

கரைசலின் அடர்த்தி = 1.2 g $L^{-1}$

12 m HCl-ல் 1லிட்டர் கரைசலில் 12 மோல் HCl உள்ளது.

$$m = \frac{\text{கரைபொருளின் மோல்களின் எண்ணிக்கை}}{\text{கரைப்பானின் நிறை (கி.கி இல்)}}$$

நீரின் நிறை கணக்கிடுதல்

1 லிட்டர் HCl நிறை = அடர்த்தி × கனஅளவு
= $1.2\ gmL^{-1} \times 1000\ mL$
= 1200 g

HCl நிறை = HCl மோல்களின் எண்ணிக்கை × HCl மோலார் நிறை
= $12\ mol \times 36.5g\ mol^{-1}$
= 438 g

நீரின் நிறை = HCl கரைசலின் நிறை – HCl நிறை
= 1200 – 438

நீரின் நிறை = 762 g

$$\text{மோலாரிட்டி} = \frac{12}{0.762} = \mathbf{15.75\ m}$$

**41. 370.28 K வெப்பநிலையில், 0.25m குளுக்கோஸ் கரைசலானது ஏறத்தாழ இரத்தத்திற்கு சமமான சவ்வூடுபரவல் அழுத்தத்தை கொண்டுள்ளது. இரத்தத்தின் சவ்வூடுபரவல் அழுத்தம் என்ன?**

விடை.
C = 0.25 M
T = 370.28 K
$(\pi)_{\text{குளுக்கோஸ்}}$ = CRT
$(\pi) = 0.25\ mol\ L^{-1} \times 0.082L\ atm\ K^{-1}mol^{-1} \times 370.28K$
= **7.59 atm**

**42. 500 g நீரில் 7.5 g கிளைசீன் ($NH_2CH_2COOH$) கரைந்துள்ள கரைசலின் மோலாலிட்டியை கணக்கிடுக.**

விடை.
$$\text{மோலாலிட்டி} = \frac{\text{கரைபொருளின் மோல்களின் எண்ணிக்கை}}{\text{கரைப்பானின் நிறை kg}}$$

கிளைசீனின் மோல்களின் எண்ணிக்கை
$$= \frac{\text{கிளைசீனின் நிறை}}{\text{கிளைசீனின் மோலார் நிறை}}$$

$$= \frac{7.5}{75} = 0.1$$

$$\text{மோலாலிட்டி} = \frac{0.1}{0.5\ Kg} = \mathbf{0.2m}$$

**43. (i) 100 கிராம் நீரில் 10 கிராம் மெத்தனால் ($CH_3OH$) கரைந்துள்ள கரைசல் (ii) 200 கிராம் நீரில் 20 கிராம் எத்தனால் ($C_2H_5OH$) கரைந்துள்ள கரைசல். மேற்கண்டுள்ள கரைசல்களில் குறைவான உறை நிலையை பெற்றுள்ள கரைசல் எது?**

விடை.
$\Delta T_f = K_f\ m$
$\Delta T_f\ \alpha\ m$

$$\text{(i)}\quad m_{CH_3-OH} = \frac{\left(\frac{10}{32}\right)}{0.1} = 3.125\ m$$

$$\text{(ii)}\quad m_{C_2H_5-OH} = \frac{\left(\frac{20}{46}\right)}{0.2} = 2.174m.$$

மெத்தனால் கரைசலின் உறைநிலைத் தாழ்வு அதிகம். எனவே அக்கரைசல் குறைவான உறைநிலையைக் கொண்டுள்ளது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



✷ கொடுக்கப்பட்டுள்ள வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில், ஒரு கரைப்பானில், அதிகபட்ச அளவு கரைபொருள் கரைந்திருக்கும்போது, அதற்கு மேல் சேர்க்கப்படும் கரைபொருள் வீழ்படிவை உருவாக்கும்.
✷ அத்தகைய கரைசலானது தெவிட்டிய கரைசல் என்றழைக்கப்படுகிறது.
✷ ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், ஒரு பொருளின் கரைதிறன் என்பது, அதன் தெவிட்டிய கரைசல் உருவாக, 100 கிராம் கரைப்பானில் கரைக்க இயலும் கரைபொருளின் அதிகபட்ச அளவு என வரையறுக்கப்படுகிறது.




## கூடுதல் வினாக்கள்

### 1 மதிப்பெண் வினாக்கள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. பின்வருவனவற்றுள் நீர்ம கரைபொருளின் திண்ம கரைப்பானைக் கொண்டுள்ள கரைசல் எது?**
(அ) ஈர ஆக்ஸிஜன்
(ஆ) தங்க உலோக கலவை
(இ) பொட்டாசியம் பாதரச கலவை
(ஈ) உப்பு நீர்
**[விடை. (இ) பொட்டாசியம் பாதரச கலவை]**

**2. குளோர்ஹெக்ஸிடின் வாய் கழுவும் திரவக் கரைசலானது ________ குளோர்ஹெக்ஸிடின் குளுக்கோனேட்டைக் கொண்டுள்ளது.**
(அ) 0.1 % (w/v) (ஆ) 0.2 % (w/v)
(இ) 0.5 % (w/v) (ஈ) 1 % (w/v)
**[விடை. (ஆ) 0.2 % (w/v)]**

**3. வணிக ரீதியில் கிடைக்கும் ஹைட்ரஜன் பெராக்சைடு கரைசலின் செறிவு**
(அ) 0.5 % (w/v) (ஆ) 1 % (w/v)
(இ) 3 % (w/v) (ஈ) 5 % (w/v)
**[விடை. (இ) 3 % (w/v)]**

**4. பின்வருவனவற்றுள் நீர்மக் கரைசல் எது?**
(அ) ஈர ஆக்ஸிஜன்
(ஆ) நீரில் கரைக்கப்பட்ட $CO_2$
(இ) பல்லேடியம் உறிஞ்சப்பட்ட $H_2$
(ஈ) தங்க உலோக கலவை
**[விடை. (ஆ) நீரில் கரைக்கப்பட்ட $CO_2$]**

**5. வெப்பநிலை அதிகரிக்கும் போது நீர்ம கரைப்பானில் திண்ம கரைபொருளின் கரைதிறன்**
(அ) அதிகரிக்கிறது (ஆ) குறைகிறது
(இ) மாற்ற மடைவதில்லை
(ஈ) முதலில் அதிகரித்து பின்னர் குறைகிறது.
**[விடை. (அ) அதிகரிக்கிறது]**

**6. பின்வரும் சமன்பாடுகளை கவனி:**

I. $\dfrac{\text{கரைபொருளின் மோல்களின் எண்ணிக்கை}}{\text{கரைப்பானின் நிறை}}$

II. $\dfrac{\text{கரைபொருளின் மோல்களின் எண்ணிக்கை}}{\text{கரைசலின் கனஅளவு}}$

III. $\dfrac{\text{கரைபொருளின் கிராம சமான நிறைகளின் எண்ணிக்கை}}{\text{கரைசலின் கன அளவு}}$

IV. $\dfrac{\text{கரைபெருளின் வாய்ப்பாட்டு எடையின் எண்ணிக்கை}}{\text{கரைசலின் கன அளவு}}$

**இவற்றுள், நார்மாலிட்டியை கண்டறியும் சமன்பாடு எது?**
(அ) I (ஆ) II (இ) III (ஈ) IV
**[விடை. (இ) III]**

**7. நைட்ரஜன் வாயுவில் உள்ள கற்பூரம் பின்வருவனவற்றுள் எதற்கு உதாரணம்?**
(அ) திண்மக் கரைசல் (ஆ) நீர்மக் கரைசல்
(இ) வாயுக் கரைசல்
(ஈ) இவற்றில் எதுவுமில்லை
**[விடை. (இ) வாயுக் கரைசல்]**

www.surabooks.com
orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 10 வேதிப்பிணைப்புகள்

## குறிப்புச் சட்டகம்


1. அறிமுகம்
   - ✶ வேதிப்பிணைப்பு பற்றிய கோசல் மற்றும் லூயிசின் அணுகுமுறையினை விவரித்தல்
2. வேதிப்பிணைப்பின் வகைகள்
   - ✶ சகப்பிணைப்புகள்
   - ✶ லூயிஸ் வடிவமைப்புகள்
   - ✶ முறைசார் மின்சுமை
   - ✶ எட்டு எலக்ட்ரான் விதிக்கு விதிவிலக்காக அமையும் லூயிஸ் அமைப்புகள்
3. அயனிப்பிணைப்பு
4. ஈதல் சகப்பிணைப்பு
5. பிணைப்பு அளவீட்டுக் காரணிகள்
   - ✶ பிணைப்பு நீளம்
   - ✶ பிணைப்புத் தரம்
   - ✶ பிணைப்புக் கோணம்
   - ✶ பிணைப்பு ஆற்றல்
   - ✶ உடனிசைவு
   - ✶ பிணைப்புகளின் முனைவுத் தன்மை
6. VSEPR கொள்கை
   - ✶ இணைதிறன் எலக்ட்ரான் இரட்டை விலக்கக் கொள்கை
7. இணைதிறன் பிணைப்புக் கொள்கை
   - ✶ VB கொள்கையின் முக்கிய அம்சங்கள்
8. ஆர்பிட்டால் இனக்கலப்பு
   - ✶ சிக்மா மற்றும் பை பிணைப்புகள்
9. இனக்கலப்பாதல்


www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



## II. சுருக்கமான மற்றும் விரிவான விடையளி:

**31. பின்வருவனவற்றை வரையறு.**

**அ] பிணைப்புத் தரம்** *[HY. 2019]*

**ஆ] இனக்கலப்பு இ] σ-பிணைப்பு**

விடை.

பிணைப்புத் தரம்:

✷ ஒரு மூலக்கூறில் உள்ள இரு அணுக்களுக்கு இடையேயான பிணைப்புகளின் எண்ணிக்கை பிணைப்புத்தரம் என்றழைக்கப்படுகிறது.

✷ பிணைப்புத்தரம் $= \dfrac{N_b - N_a}{2}$

இங்கு,

$N_b$ = பிணைப்பு மூலக்கூறு ஆர்பிட்டாலிலுள்ள மொத்த எலக்ட்ரான்களின் எண்ணிக்கை

$N_a$ = எதிர் பிணைப்பு மூலக்கூறு ஆர்ப்பிட்டால்களில் உள்ள மொத்த எலக்ட்ரான்களின் எண்ணிக்கை.

இனக்கலப்பு:

✷ ஒரே அணுவின், ஒப்பிடத்தக்க அளவு ஆற்றலுடைய அணு ஆர்பிட்டால்கள் ஒன்றொடொன்று கலந்து, சம எண்ணிக்கையில் சம ஆற்றலை பெற்றுள்ள புதிய சமமான ஆர்பிட்டால்களை தரும் செயல்முறை இனக் கலப்பாதல் என வரையறுக்கப்படுகிறது.

σ-பிணைப்பு:

✷ இரண்டு அணு ஆர்பிட்டால்கள் அச்சுகளின் வழியே மேற்பொருந்தும் போது உருவாகும் பிணைப்பு σ – பிணைப்பு எனப்படுகிறது.

✷ இந்த மேற்பொருந்துதல் அச்சுவழி மேற் பொருந்துதல் எனவும் அழைக்கப்படுகிறது.

**32. பை (π) பிணைப்பு என்றால் என்ன?**

விடை. ✷ இரு அணு ஆர்பிட்டால்கள் பக்கவாட்டில் மேற்பொருந்தும்போது உருவாகும் சகபிணைப்பு பை பிணைப்பு (π) எனப்படும். x-அச்சு மூலக்கூறு அச்சாக கருதும் நேர்வில் $p_y$-$p_y$ மற்றும் $p_z$-$p_z$ ஆகிய ஆர்பிட்டால்கள் மேற்பொருந்துதலால் π பிணைப்பு உருவாகிறது.

**33. $CH_4$, $NH_3$ மற்றும் $H_2O$ ஆகியவற்றிலுள்ள மைய அணுக்கள் $sp^3$ இனக்கலப்பிற்கு உட்பட்டுள்ளன. எனினும் அவற்றின் பிணைப்புக் கோணங்கள் வெவ்வேறாக உள்ளன. ஏன்?**

விடை. ✷ $CH_4$, $NH_3$ மற்றும் $H_2O$ ஆகியவற்றின் மைய அணுக்கள் சகப்பிணைப்புகளை உண்டாக்குகின்றன.

✷ சகப்பிணைப்புகள் திசைப் பண்புடையவை. அவைகள் புறவெளியில் குறித்த திசையினை நோக்கி அமைகின்றன.

✷ இதன் காரணமாக $CH_4$, $NH_3$ மற்றும் $H_2O$ மூலக்கூறுகளின் இரு சகப்பிணைப்புகளுக்கு இடையே குறிப்பிட்ட நிலையான கோணம் உருவாகிறது.

**34. $BF_3$ மூலக்கூறில் காணப்படும் $sp^2$ இனக்கலப்பை விளக்குக.**

விடை. $sp^2$ **இனக்கலப்பு:**

✷ போரான் ட்ரை புளூரைடு மூலக்கூறில் பிணைப்பு உருவாதலை கருதுக.




✷ போரான் அணுவின் இணைதிற கூட்டு எலக்ட்ரான் அமைப்பு $[He]2s^2\ 2p^1$ அடி ஆற்றல் நிலையில் போரான் அணுவின் இணைதிறன் கூட்டில் ஒரே ஒரு இணையுறா எலக்ட்ரான் உள்ளது.

✷ புளூரினுடன் மூன்று சகப்பிணைப்பை ஏற்படுத்த மேலும் மூன்று இணையுறா எலக்ட்ரான்கள் தேவையாக உள்ளது. இதனை பெறும் பொருட்டு, போரானின் 2s ஆர்பிட்டாலில் உள்ள இரு எலக்ட்ரான்களில் ஒரு எலக்ட்ரானானது $2p_y$ ஆர்பிட்டாலுக்கு கிளர்வுற்று இனக்கலப்பாதலுக்கு உட்பட்டு, படத்தில் காட்டியுள்ளவாறு மூன்று சமமான $sp^2$ இனக்கலப்படைந்த ஆர்பிட்டால்களைத் தருகின்றன.

✷ இம்மூன்று ஆர்பிட்டால்களும் xy என்ற சம தளத்தில் அமைகின்றன. மேலும் இரு ஆர்பிட்டால்களுக்கு இடையே பிணைப்புக் கோணம் $120^o$.




புளூரினின் $2p_z$ ஆர்பிட்டால்கள் மேற்பொருந்துதல்:

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.Surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores



# அரசு தேர்வு வினாத்தாள்கள்

## பகுதி - II

**குறுகிய விடையளி :** **2 மதிப்பெண்**

**1. பிணைப்பு நீளம் என்றால் என்ன? எத்தகைய நுட்பங்களைப் பயன்படுத்தி பிணைப்பு நீளத்தினைக் கண்டறியலாம்?** **[மார்ச் 2019]**

**விடை.** **பிணைப்பு நீளம் மற்றும் அதனைக் கண்டறிய உதவும் நுட்பம் :**

✴ சகப்பிணைப்பால் பிணைக்கப்பட்டுள்ள இரு அணுக்களின் அணுக்கருக்களுக்கு இடைப்பட்ட தொலைவு பிணைப்பு நீளம் எனப்படுகின்றது.

✴ நிறமாலை முடிவுகள் X-கதிர் விளிம்பு விளைவு மற்றும் எலக்ட்ரான் விளிம்பு நுட்பங்களைப் பயன்படுத்திப் பிணைப்பு நீளத்தினைக் கண்டறியலாம்.

**2. நைட்ரிக் அமிலத்தின் லூயிஸ் புள்ளி அமைப்பினை வரைக.** *[HY. 2019]*

**விடை.** நைட்ரிக் அமிலத்தின் லூயிஸ் புள்ளி அமைப்பு :



## பகுதி - III

**சுருக்கமான விடையளி :** **3 மதிப்பெண்**

**1. $C_2H_2$ மற்றும் $CO_2$ ஒத்த வடிவத்தை பெற்றுள்ளன ஏன்? விளக்குக.** **[மார்ச் 2019]**

**விடை.** $C_2H_2$ - நேர்க்கோட்டு அமைப்பு – sp

$CO_2$ - நேர்க்கோட்டு அமைப்பு – sp

இரண்டும் ஒரே மாதிரியான இனக்கலப்பினைப் பெற்றிருப்பதால் ஒரே வடிவத்தைப் பெற்றுள்ளது.

## பகுதி - III

**விரிவாக விடையளி :** **5 மதிப்பெண்**

**2. $\ddot{O} = C = \ddot{O}$ என்ற மூலக்கூறு அமைப்பில் உள்ள கார்பன் மற்றும் ஆக்சிஜன் மீதாக முறைசார் மின்சுமையை கண்டுபிடிக்கவும்.** **[ஜூன் 2019]**

**விடை.** கார்பனின் முறைசார் மின்சுமை $= N_V - \left[N_l + \frac{N_b}{2}\right]$

$$= 4 - \left[0 + \frac{8}{2}\right] = 4 - 4 = 0$$

ஆக்சிஜனின் முறைசார் மின்சுமை

$$= 6 - \left[4 + \frac{4}{2}\right] = 6 - 6 = 0$$

கார்பன் மற்றும் ஆக்சிஜன் மீதாக முறைசார் மின்சுமை $= \overset{0}{\ddot{O}} = \overset{0}{C} = \overset{0}{\ddot{O}}$.

www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

அலகு

# 11 கரிம வேதியியலின் அடிப்படைகள்

## குறிப்புச் சட்டகம்

1. அறிமுகம்
2. கரிம சேர்மங்களை வகைப்படுத்துதல்
   * வடிவமைப்பை பொறுத்து வகைப்படுத்துதல்
   * வினைச்செயல் தொகுதியின் அடிப்படையில் வகைப்படுத்துதல்
3. கரிமச்சேர்மங்களுக்குப் பெயரிடுதல்
   * IUPAC விதிமுறைகள்
4. கரிமச் சேர்மங்களின் அமைப்புகளை குறித்தல்
5. கரிமச் சேர்மங்களில் காணப்படும் மாற்றியம்
